சுத்த சைவம், வீர சைவம், மார்க்க சைவம், ஞான சைவம், கிரியா சைவம், எனப்பஞ்ச சைவத்திற்கு விபரம். (1) சுத்த சைவத்திற்கு சிரார்ச்சனம், புர மூலஸ்தான லிங்கம். (2) வீர சைவத்திற்கு பஞ்சமுத்திரை பரிபூர்ணமான குருலிங்க ஜங்கமம். (3) மார்க்கசைவத்திற்கு யோகிகள், ஞானிகள், மந்திரவாதிகள், திகம்பரர், அவதூதர், மஹாத்மர். முதலான (21) ஆசனத்தவருக்கு, வீரசைவ மில்லை. யோகத்தினால் பச்சிமவென்னும், மேற்குமார்க்கத்தவாராகி பிராண லிங்க சம்மந்திகளானார்கள். இவர்களுக்கு இஷ்டலிங்க மில்லை, பிராண லிங்காங்கிகள், இது மார்க்கசைவம். இன்னும், (4) ஞான சைவம் எப்படி யென்றால் மூலஸ்தானத்து லிங்கத்திற்கு அன்னம், பானம், புஷ்பம், பழம். தாம்பூலம், வஸ்திரம், ஆபரணம், ஔஷதம் முதலானவைகள் சமர்ப்பிக்காமல் தான் கொள்ளக்கூடாதென்பதே ஞான சைவம் இன்னும்தன் தேஹத்திற்குவந்த சுகம், துக்கம், தட்டு, முட்டு, தாகு, சோகு, நிரோதம், இஷ்ட முதலான மனோவிஷயங்களையும், மூலஸ்தான லிங்கத்திற்கு சமர்ப்பிக்காமல் புரம்பாகக்கொண்டாலவன் கோமாம்சம் புசித்தபிறகு சுராபானம் செய்ததற்குச் சமானமாகும், இன்னும், (5) கிரியாசைவம் எப்படியென்றால், சரணசதி, லிங்க பதியான பிறகு சரணன் சதிசங்கமம் செய்தால் ரௌரவ நரகம். அதெப்படி என்றால் தான் லிங்கத்திற்குச் சதியான பிறகு சதிக்குச் சதிக்குச் சங்கமுண்டா, நிர்க்கங்கைக்குச் சங்கமுண்டா, இப்படிச்சரணனே சதியாகவும், லிங்கமே பதியாகியது. இது தான் கிரியா சைவம், ஆக இவைகள் பஞ்ச சைவநிர்ணயம், இப்படிப்பட்ட பஞ்சசைவங்கள் ஜங்கம ப்ரேமிகளுக்கே சம்மந்தப்பட்டது. இன்னும் குருதேவனென்னும், சப்தமும் இச்சங்கமர்களுக்கே சம்மந்தப்பட்டது. இன்னும், இப் ஞ்ச சைவம் யாருக்கென்றால் மஹாந்து மல்லிகார்ஜுன சாலிங்கத்திற்கும், இன்னும் சர்வத்ரயமான வேத மூர்த்திக்கும் குரு லிங்க ஜங்கமமென்று திரிகுணாத்மக லிங்கமானது

---

குறிப்பு:—வீர சைவம், சுத்த சைவம், மிசிர சைவம், சாமான்ய சைவம், இந்நான்கு சைவங்களின் விரிவான தத்துவங்களும், இன்னும் இந்நான்கு சைவர்களின் தீக்ஷாக்கிரமங்களும், இன்னும், வீரசாமானியர், வீர விசேஷர், வீரநிராபாரி களுடைய சவிஸ்தார தத்துவங்களடங்கிய துறையூர், ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய அத்துவித வெண்பா வென்னும், தமிழ் புஸ்தகம் உரையுடன் கிடைக்கும். அதிலநேக சங்கதிகள் விஸ்தாரமாகத் தெரிந்துக் கொள்ளவும். இன்னும்,வீரசைவ வினாவிடை புஸ்தகத்திலும், சுருக்கமாகத் தெரிந்துக்கொள்ளவும்.

## (12)-வது (21) ஆசனத் தவர்கள் (16) தருசனத் தவர்கள்.

ஆதிருத்திரன் புருமத்தியஸ்தானத்தில் (21) ஆசனத்தவர்கள், (6) தர்சனத்தவர்கள் பிறந்தார்கள். (21) ஆசனத்தவர்களின் பெயர்களாவன. (1) பட்டப்பிரபாகரர். (2) மீமாம்சகர். (3) சார்வாகர். (4) அவதூதர் (5) திகம்பரர் (6) மஹாத்மர். (7) சாம்பவர், (8) தத்தர், (9) பிரேமநாதர், (10) ஆனந்தநாதர். (11) பைரவநாதர். (12) கபாலவுளிகர், (13) பலிந்த்திராதித்யர். (14) கணபர், (15) சௌரர், (16) பாஷண்டியர், (17) பாசுபதியர், (18) பரமவேஷவதியர், (19) ருண்டாசார்யர், (20) சௌம்ய காசார்யர், (21) பௌர்ய காசார்யர், இன்னும்,

### சுலோஹம்.

சைவம் பாசுபதச் சைவ—காளிகச்ச கபாலிக
மஹாவ்ரதி த்ரிதண்டிச்ச ஏகதண்டிச்ச வைஷ்ணவ :(95)
அன்னதோபேவ சந்த்ரார்க்கம் மன : பவன பாவித :
சேஷப்ரசாத வைஜந்தோ ரசமேக ளாநிதி (97)

### தருசனத் தவர்கள்.

(1) ஏகதண்டியர், (2) சைவசாக்தர், (3) த்விதண்டியர், (4) பௌத்த சாக்தர். (5) த்ரிதண்டியர். (6) மஹாவதியர். (7) சதுர்த்தண்டியர், (8) பாசுபதியர், (9) பூசுரர், (10) வைஷ்ணவ தண்டியர். (11) வேத வேத்தியர் (12) பிரஹ்மதண்டியர், இன்னுமிதில்மிசிரதர்சனம், (6) அவையாவன:- (1) அன்ன, (2) உதக, (3) மன, (4) பவன, (5) சந்திர, (6) சூரியன், இன்னுமிதில் மிசிரதர்சனம். (6) அவையாவன, (1) பூமி, (2) மளெ, (3) பெளெ, (4) பிந்து, (5) ருது, (6) மசி, ஆகபிந்த (24) தர்சனத்திற்கும். பிராணலிங்கம், இத்தர்சனத்தவர்களுக்கும், (21) ஆசனத்தவர்களுக்கும், குமைஹாலிங்கமான ஹரிஹரலிங்கம், அது தானே சரலிங்கம், இன்னும்

### (13) ஜங்கம மஹிமை சுலோஹம்.

தபோதன நசார்யாத்யோ குருதைவந்து ஜங்கம :
மந்த்ர முச்சார்பவிப்ரஸ்ப நதேவோருத்ரமே குரு : (115)

ஊர்த்வரேதோ ஜகாரேண காபாலி ஜங்கமஸ்ததா
ஜங்க ஜனிதாஜோகி சர்வதேவோ நிரஞ்ஜன : (116)

ஜங்கத்திற்கு குருவென்றும், லிங்கமென்றும், இன்னும், ஜங்கமமே. சரலிங்கம், ஜங்கமமே குருலிங்கம், ஜங்கமமே ஸ்வயம் லிங்கம், ஜங்கமமே ஜகத்திற்கு குருவு, குருதேவனே மஹாதேவன், குருதேவனே சதாசிவன், ஜகத்திற்கு குருவே ஜங்கமதேவன்.

சுலோஹம்.

மூலமூர்த்தி மஹாதேவோ வேதவேத்திய சதாசிவ:
ஆதிகர்த்த ஜகன்னாத வர்ணானாம் குருஜங்கமம் (117)

ஜாதஸ்ய ஜங்கமம் தேவோ அக்னிஸ்ச விப்ரதேவத:
ஆசாரஞ்ச சிவாசாரம், வர்ணானாம் குரு ஜங்கமம் (118)

தியானமூலோ குரோ மூர்த்தி பூஜாமூலோ குரோ: பதம்
மந்த்ர மூலோ குரோர் வாக்யம் முக்தி மூலோகுரோ:
க்ருபா (119)

குரோர் மாதா குரு: பிதா குரூணாம் பந்துமேவச:
குருதைவம் பரம்நாஸ்த்தி தஸ்மை ஸ்ரீ குருவே நம: (120)

குரோர்மாதா-ஜங்கமமே உலகத்திற்குத்தாய், (குரு: பிதா) ஜங்கமமே உலகத்திற்குத் தந்தை, (குரோணாம் பந்துமே வச:) ஜங்கமமே உலகத்துக்கு பந்துக்கள், (குரு தைவம் பரம் நாஸ்தி) ஜங்கமமே உலகத்திற்கு குரு தெய்வமல்லாது மீதி யுள்ள ஆறு தர்சனங்கள் தைவமல்ல. (தஸ்மை ஸ்ரீ குருவே நம:) இந்த ஸ்ரீ குரு ஜங்கமத்திற்கு நமஸ்காரம், ஜங்கமமே ஈரேழுபதினான்கு உலகத்திற்கும், குருவென்று வேத விதி சொல்லியிருக்கிறது. ஓங்காரமே ஜங்கமஸ்வரூபம், ஓங்காரமே ஜங்கம மூலமூர்த்தி, இந்த ஜங்கமமே வேத வேதாந்த சதாசிவ மூர்த்தி, இச்சங்கமமே ஆதிகர்த்த, ஜகன்னாதம். இச்சங்கமமே (வர்ணானாம் குரு:) என்று வேதம் செல்லியது. இச்சங்கமமே மூலபிரணவம்.(பர்கோதேவ) இச்ஜங்கமமே சஹஸ்ரசீர்ஷ புருஷன், (சஹஸ்ரபாஹூ ரூப்யாம்.) என்றது. இச்சங்கமமே ருத்ர புருஷசூக்தம்,

பர்க்கோ தேவஸ்ய தீமஹி அதிய்யயோந: ப்ரசோதயாத்
தத்சவித்ருண்ய,...............என்றது.

வேத மாதாசகாயத்திரீ மாதப்ரணவ காயத்ரிக்கு ஓங்காரமே மந்திரம், இவ்வோங்காரமே பரசிவன் இப்பரசிவனே சாக்ஷாத் ஜங்கமலிங்கம், இச்ஜங்கமமே பூருத்ரன், வேதங்களுக்குக் கர்த்தா பிரஹ்மா பூசுரபூமிக்கு கர்த்தா, ஜங்கமமே ஜகத்திற்கு அந்தர்யாமி ஜங்கமமே சர்வதேவர்களுக்குத் தேவன், நிரஞ்ஜனஜங்கமமே குல குலத்தவருக்கு குலஸ்வாமி, குலமஹாலிங்கம், இச்ஜங்கமமே யக்ஞமோள புரோஹிதன், (யக்ஞமோளாத் விஜஸ்த்து) என்றது. ருக்வேத ஸ்ரீ ருத்ரபஞ்சாங்க ருத்ர, ஷடாங்க ருத்ரனென்னும், திரிகுணாத்மக லிங்கம், (ஸ்ரேஷ்டந்து லிங்க ஜங்கமம்) என்றது. சகல பரம ரஹஸ்யங்கள் இச்ஜங்கமத்திலேயே அடங்கியிருக்கிறது. இன்னும் (வர்ணானாம் குரு)என்னும் வாக்கியம் ஜங்கமருக்கேயொழிய விப்பிரருக்கல்ல, அதெப்படி யென்றால்:

(18) ஜாதியாருடைய வீட்டிலும், பஞ்சகலப்பிரதிஷ்டை செய்து கணசங்குள சஹமாக சர்வருக்கும், தீக்ஷை, சிக்ஷை, மோக்ஷம், முதலானவைஜங்கமன், குடுக்கும்மாதிரி விப்ரன் குடுக்கலறியான், எச்ஜாதியிலாவதும் க்ருஷ்டா கிருஷ்டியானால் நதியில் போய் ஸ்நானம் செய்வான் விப்பிரன், என்னகாரணமென்றால் விப்பிரஜாதிக்குப்புறம் பானேனென்னும் பயத்தினலப்படிச் செய்வான் இன்னும்சகலருக்கும்சூத்ரவென்னும் பெயர்சொல்லும்போது,பிரம்ம, க்ஷத்திரிய,வைஸ்ய, சூத்திரனென்றும், இன்னும் சகலதேவான்ன, பரான்ன, சூத்ரான்ன வென்றும், சூதகத்தை யிட்டு வர்ஜ்ஜிக்கும் பிராணிகளுக்கு உபநயனம், தீக்ஷை, செய்யமாட்டான். விப்ர குலத்தர் ஜனித்தாலவன் பூர்வா சிரயத்தை நீக்கி மாம்ச பிண்டத்தைப் போக்கி, மந்திரபிண்டமாக்கி லிங்கம், வேறேகட்டலறியான், பின்னும், எச்ஜாதியினர் செத்தாலும், அச்சவத்தை யல்லது அச்சவ விமானத்தைக்கண்டு மூலையில் போய் அடங்குவான். விப்ரன். ஜங்கமனைப்போல சவத்தைச் சுமந்து மசான பூமியில்போய் சஞ்சரித்ததின்மேல் சமாதியை மிதித்துப் பூஜை செய்து மூக்தியைக் கொடுகக வரமாட்டானே, இன்னும், ஜகத்து ஜனங்கள் ராஜீகம், தைவீகத்தினல், ஜாதி சங்கரமாகி மிலேச்சனுனல் விப்ரன் சுத்தம் செய்யமாட்டானே, இன்னும், விப்ரன், பறச்சி, தொம்பச்சி, துலுக்கச்சி, சக்கிலிச்சி, இந்நால்வருடைய வேசிய சங்கத்தினல் யாதாவதொருவன் ப்ஷ்டப்பிரஷ்டனுகிகெட்டால் விப்ரன் சுத்தம் செய்து தமக்குள் கூட்டிக்கொள்ள மாட்டானே இன்னும்,

ஜங்கமம் போக்கும் மாதிரி அஸ்வஹத்தியம், பிரஹ்மஹத்தியம் ஸ்த்ரீ ஹத்கியம், சிசுஹத்தியம், முதலான பாதகங்களை விப்ரன் போக்கலறியான். விப்ரன் தூரத்திலுட்கார்ந்து அவனுக்கு ஒரு தீர்த்தத்தில் பஞ்சகவ்பம் குடித்து புஜதோசந்த்ராயணவிரதம குடுத்து பிராயச்சித்தம் செய்வான், இன்னும் தன் ஸ்வயம் ஜாதியாரைத்தவிரமற்ற ஜாதியாரைத்தீண்டான், தீண்டினல் ஸ்நானம் செய்வான். இப்படிப்பட்டவன் சுத்தத்வம் செய்யலறியான். இன்னும் விப்ரன் கொடுக்கும், பிராயச்சித்தத்தை விட ஜங்கமதேவன் கொடுக்கும் பிராயச்சித்த மதிகம், இது பவிபிராயச்சித்தக் கிரமம், வீரசைவ மதாசார சங்கிரத்தில் சொல்லியிருக்கிறது. அதில் (121)-வது சுலோஹம் முதல் (125)-வது சுலோஹம் வரையில்பார்ககவும்.

சுலோஹம் (2)

ஆஜாண்ட சுத்த நிச்சைவத்ரி புண்ட்ரமேவச
சுராபான் சுத்ததே மந்த்ர (122)
சூத்ரான்னம் நிந்ததே விஜ: அன்னும் நிந்ததே வேதம்
கிம்வேதம் மாச சுத்ததி (123)

பசிதகாலாக்கினி ருத்திராத்மகமான விபூதியினால், சகமெல்லாம் சுத்தமாகும். அதெப்படி யென்றால் ஹடமாரி பூத பேதங்களையும் துறத்தும். மிருத்யு, அபமிருத்யு, காலகர்மம், தாரித்ரியம், இவைகளைச் சுட்டது. இன்னும் அஷ்டா சஷ்டிகோடி தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தபலன்கொடுத்து சிவலோகத்தை யடையும் பதவியைக் கொடுத்து ரக்ஷிப்பது, யாதாவதொன்றின்மேல் பஸ்பம் போட்டால் அது சுத்தமாய்விட்டது. இதற்குச்சாக்ஷி, பிரமாண்டத்திற்குள் ஈரேழுஉலகங்களையும் எது சுத்தம் செய்வது, ஜலம் சுத்தம் செய்யும், ஈரேழு புவனபாதகங்களெல்லாம் தங்களுடையதென்று சகல தீர்த்தங்களும், என்னைக்குசுத்திசெய்வதென்று சிந்தித்துக்கொண்டிருக்க அதற்குள்ளாக பஸ்மாங்கியான ஜிதேந்திரிய: ஜாதி ஜங்கமதேவன், இந்நதியில் போக அந்நதியின் பாதகம் அக்ஷணமேபோயிற்று. அபமஹேஸ்வரன் பாதம் பட்டவுடனேயே பாதகம் தீர்ந்தது. இன்னும் அச்ஜங்கமதேவன், அந்நதி தீரத்திலுட்கார்ந்து பஸ்மதாரணம் செய்து அஸ்தம், பாதம், முகம் இவைகளைக் கழுவி பிரக்ஷாளனம் செய்தால் அந்நதியைச் சேர்ந்துள்ள, பவ, பவ, கோர, பாதகங்களெல்லாம், கழுவிபபோகாது. தீர்ந்து விட்டன, இன்னும், நிமிஷநிமிஷார்த்தத்தில் விப்ரன் மந்திரத்தால் கங்கையின் பாபம் போக்கலறியான். விப்ரன் நதிக்குப்போய் அஸ்தம், பாதகம். முகம், தேஹம், வஸ்திரம், இவைகளைக்கழுவ அவ்விப்பிரன் தோஷம் நதிக்கல்லாது அந்நதியின் தோஷம் நீங்காது, (சுராண சுத்தே மந்த்ரம்,) விப்பிரன் சுராபானமந்திரத்தால், சுத்தம் செய்துக் குடிப்பான். அன்னோதகம், சமோ தீர்த்தமென்றறியாமல்சூத்ரான்னமென்று வேறுபனே நிந்திப்பான், எந்த வேதம் சூத்திரான்னத்தை விலக்கும்படிச் சொல்லியது. எந்த வேதம், சுராபானமாம்சத்தைச் சுத்தஞ்செய்து அவ்விப்பிரரைத் தின்னச் சொல்லி தின்னவைத்தது.

## (14) ஜங்கமப் பிரசாதம் சுலோஹம்.

ஜங்கமஞ்ச பிரசாதேன மச்சகூர்மாதி ஜந்தவு
புஞ்ஜிதே சர்வஜீவினம் ருத்ரலோகேச கச்சயதி (126)
ஜங்கமம் பாத தீர்த்தஞ்ச ஜலபிந்து சமன் விதம்
மாருதம் புஞ்ஜிதே சர்ப்பம் சோரதஷ்டந்தி முக்திமான்
அதவே நஜநிம் கச்செக் ககபச்ச விகாசிதம் (127)
எகசத்ர பவேத் ராஜ்யம் சிவலோகே மஹிய்யதே (128)

சர்வ நதிகளைச்சுத்தம்செய்த ஜங்கமதேவன் அந்நதிக்குள்ளிருக்கும் ஜலசரங்களையும் சுத்தஞ் செய்வான். அதெப்படி யென்

ருக் ஒருவீர ஜிதேந்திரிய தேசிகோத்தம சரலிங்க ஜங்கம தேவன் கிராம கிராமங்கள் தோறும் பிக்ஷை யெடுத்து நதிதீரத்திற்குப்போய் அந்நதியில். பாதம், கை, வதனம் கழுவிக்கொண்டு உட்காரவும் அப்பாத ஜலபிந்து தெரித்துப்போய் அந்நதி தீரத்தில் புல்லிற்குள் காற்றிற்கு வாய் திறந்திருந்த சர்ப்பத்தின் வாய்க்குள் விழவும் அச்சமயத்தில் கள்ளனொருவன் பரவஸ்த்துக்களைத் திருடிக்கொண்டு வரும்போது தெரியாமல் அச்சர்ப்பத்தை மிதிக்கவும் அச்சர்ப்பம் கடிக்கவும் கடித்ததைக் கண்டக்கள்ளன் சர்ப்பத்தையடிக்கசர்ப்பமிறந்தது,கடியுண்டக்கள்ளனு மிறந்தான். அப்பொழுது அக்கள்ளனாகிய சோரனுக்கும் சர்ப்பத்திற்கும் முக்தியாய் விட்டது, அதெப்படி யென்றால், அத்தேசி கோத்தமனின் பாதஜலபிந்து அச்சர்ப்பத்தின் வாய்க்குள்ளிருந்து கடிக்க அப்பாத தீர்த்தம் உபயத்ராளுக்குக் கிடைக்க மந்தார கைவல்ய பத மாச்சுது, இப்படியாக ஜங்கமதேவன் பாததீர்த்தம் கொண்டால், பவத்திற்கு வரான், தானே சதாசிவனாக யிருப்பான்,

பின்னுமச்சங்கம தேவன் ஆசனத்திலமர்ந்து (11) ஸ்தானங்களில் விபூதியணிந்து கங்காஜலத்தை இஷ்ட லிங்காபிஷேகம் செய்து, விபூதி தரித்து அப்பிக்ஷான்னத்தை லிங்கத்திற்கு அற்பித்து அந்த லிங்கப் பிரசாதத்தினால் ஆனந்தித்து மிக்க சேஷான்னத்தையும் ஜோளிகையையும் கங்கையில் கழுவ, அம்மஹா பிரசாதத்தை மச்ச கூர்ம முதலான ஜலசரங்கள் புசிக்க, அச்ஜலசரங்களெல்லாவற்றிக்கும் சிவசாயுஜ்யபதவி யாயிற்று, இதைத் தெரிந்து, ஜங்கமப் பிரசாதம் கொண்ட அம்மனிதன் சுவர்க்க, மத்ய, பாதாளத்திற்கு சதாசிவனாகப் பிறப்பான், இன்னும், அச்சங்கம தேவன் கங்கா ஸ்நாநத்தினால் சித்திரை வைகாசி மாத வெய்யலில் போகும்போது ஒரு கழுகு இறகைவிரித்துக் கொண்டு வெய்யலின் தாபத்திரயத்திற்காக மேலேநிற்க, அக்கழுகுக்கு ஏகசக்ரத்தினாலாளும் அரசன் மாளிகையுண்டாக்கினார் சிவன், அப்பக்ஷி அம்மாளிகையிலிருந்து சகல ராஜ்யங்களையாண்டது,

## (15) உதய தரிசனம், சுலோகம்.

ப்ரபாதே ஜங்கமம் த்ருஷ்ட்வா சர்வலிங்கந்து தர்சனம்
லலாட சரணம் மத்யே கோடி தீர்த்த பலம் பவேத் (129)
ப்ரபாதே விப்ர சந்த்ருஷ்ட கோடி ஜன்மேன சூகர:
அதவா வந்தனம் க்ருத்வா, ரௌவ நரகம் ப்ரசோத் (130)

ஜங்கம தேவனை உதயத்தில் தரிசித்தால் பூமியிலுள்ள அனந்த கோடி லிங்கத்தைத் தரிசித்த பலன் சித்திக்கும், இன்னும் ஜங்கம தேவனுக்குத் தீர்க்க தண்டநமஸ்காரம் செய்தால் ஒரு கோடி தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்த பலன் அக்ஷணமே யுண்டாகும், இன்

னும் உதயத்தில் விப்பிரனைக் கண்டால் ஒரு கோடிபன்றி கெற்பத்தில் பிறந்து பிறந்து வந்து பறச்சேரியில் நரகம் புசிப்பான், இன்னும் விப்பிரனுக்கு நமஸ்கரித்துக் காலின் மேல் விழுந்தால் சந்திர சூர்யருள்ளவரை நரகத்திலுழன்றுக் கொண்டிருப்பான், இப்படிப்பட்ட விப்ரன் தன் சுயஜாதிக்குக் குருவே யொழிய மீதியுள்ள ஜாதிகளுக்குக் குருவல்ல, வர்ணவர்ணங்கள் கூடிக்கொண்டு பிரவர்த்திக்கும் நிமித்தமாக (வர்ணானாம் குரு ஜங்கமம்) என்றது. ஆனதினால் எல்லவர்ணங்களுக்கும் ஜங்கமமே குருவு.

(16) பரசிவ ஜங்கம ஸ்தலம் சுலோகம்.

சைதன்யம் சாஸ்வதம் சாந்தம் வ்யோமாதீதம், நிரஞ்ஜனம்
நாதபிந்து களாதீதம் தஸ்மைஸ்ரீ குருவே நம: (131)

ஆனிஷ்கல பரசிவன் ஜங்கம ஸ்தலம் எதுவென்றால் அண்டஜம், பிண்டஜம். உற்பிசம், சுவேதசம்என்னும் சௌர்யாம்சி லக்ஷஜீவராசிகளுக்கு சைதன்யாத்மகனாகி சமஸ்த ஜீவர்களின் ஆணவ மலம், மாயா மலம், காமிக மலம், என்னும் மாயாபாசத்தினால் சுவர்க்க நரக மென்னும்உபயகப்பத்தில் கட்டி காலகாமருக்கு வசம் செய்வான். அப்படிப்பட்ட சீவருக்கு சம்சாரம் நீங்கி, ஸ்ரீ குருவைத் தெரிந்து சரணம் செய்தால், அவருக்கு மூவேழு தீக்ஷயினால் சுத்தாத்மனம் செய்து சிவசாயுஜ்ய பதத்தைக் கொடுக்கும் ஸ்ரீகுரு மூர்த்தியான ஜங்கம தேவன், சாஸ்வத னென்றால் அசங்க்யாத ப்ரஹ்மர், கோடி விஷ்ணுக்கள், சமுத்திர மணலவ்வளவு இந்திராதிகள் பிரளயமாகும் போது பிரளய விரஹிதனாயிருந்தா னென்பதால் சாஸ்வதன், சாந்த னென்றால் சமஸ்தசராசர பிராணிகளுக்குத் தன் கிருபா பிரசாதத்தைக் கொடுத்து ரக்ஷிப்ப னென்பதால் சாந்தன், வியோமாதீத னென்றால் (36) தத்துவத்திற்கும் மேலிட்டதத்துவ னென்பதால், வியோமாதீதன், நிரஞ்ஜன னென்றால் நரஜீவர்களைப் பசுவாக்கி மாயையைப் பசுபதியாக்கித் தன் முப்புரி கயற்றினால் கட்டிக்கொண்டிருப்பதால் மாயாநிரஞ்ஜனன், அப்படிப்பட்ட மாயையைத்தன் சூத்திரத்தால் ஆட்டுவிப்பா னென்பதினால் நிரஞ்ஜனன். நாத, பிந்து களாதீத னென்றால் ஆத்மயோகிகள் ஆசனபந்தங்களினால் வாயுக்களையெல்லாம் ஊர்த்துவத்திற் கெடுத்து நாக்கை சுசும்ன துவாரத்தில் வைத்து சண்முகி, சாம்பவி, கேசரி என்னும் ஹடகர்ம யோகத்தில், நாதபிந்துக்களைப் பேதித்துக் கண்டு கூடினே னென்னும் கண்டிதயோகிகளுக்கு அகப்படே னென்பதால் நாதபிந்துகளாதீதன், இப்படிப்பட்ட தேசிகோத்தமனான நிஷ்கள ஜங்கம தேவன், பாதத்திற்கு நமஸ்காரம் செய்யவேண்டியது, ஈதல்லாமல்.

விப்ரனே தெய்வ மென்று நம்பி ஆராதித்த கௌதமருக்குக் கோவதை தோஷப் பிராப்தமாயிற்று, இன்னும்விப்பிரனே தெய்வ

மென்று ஆராதித்த கர்ணனுக்கு கவசம் போயிற்று, ஆனதினால், குருலிங்க ஜங்கமமே கனமென்று நம்பிபூஜித்த காரணம் சைவ சோளர்கள், (63) புராதனர்கள், (780) அமரகணங்கள், சாயுஜ்யபதஸ்தராகி நிஜமோக்ஷத்தை யடைந்தார்கள், கேளும் நந்தி நாதா

## (17) பிரளய காலம்.

கணக்கில்லாத பிரம்மாக்கள் பெயரில்லாது போனார்கள், கோடி விஷ்ணுக்கள் லயமானார்கள். சமுத்திர மணலவ்வளவு இந்திரர்கள் இறந்து போனார்கள், சிவசிவா மாரணம் யாரையும் விடுவதில்லை, ஆதிருத்திரன் கண்ணிமை சிமிட்டுவதற்குள் இவ்வளவுமாயிற்று, அந்த ருத்திரரெல்லாரும் பிரளயத்திற்குள்ளாகிப்போனார்கள், இன்னும் சசிதரர், கௌரீபதி, ஈஸ்வரன், சதாசிவன், யந்த்ரஜீவ, தந்த்ரஜீவ, பசுபதி, விருஷபவாஹனர், இப்படிப்பட்டவர்களெல்லாரும் பிரளயத்திற்குள்ளாகி யிருக்கும்போது, பிரளயவிரஹித பராத்பர சிவலிங்க ஜங்கம மூர்த்திக்கு சமஸ்த பிரளய மெல்லாமிருந்து பரசிவ ஜங்கமமூர்த்தியின் முழங்காலுக்குத்துணியைக் கட்டினார்கள், என்னவென்று பிரளயகாலம் ஜங்கமலிங்க மென்று.

### ஸ்ரீ ருத்ரேள வாச சுலோஹம்.

லயம் ச்ரஷ்ட லயர்ஜ் ஜாதம் லயருத்ராதி தேவத:
அஹம்மே வாலயந் த்ருஷ்ட சீக்ரந்து சிவபூஜனம் (139)
ஜீவிதஸ்யம் ருதம்த்ருஷ்ட அர்த்த பிராணேன நாஸ்திகம்,
க்ஷணம் க்ஷணந்து மித்புக்தம் சீக்ரந்து சிவபூஜனம்,(140)

பிரம்மன்தான் நித்திய னென்றால், நித்யனல்ல, அனித்தியனே பிரம்மன் இறந்து போனான், விஷ்ணு தான் நித்திய னென்றால் விஷ்ணுவும் நித்தியனல்ல, அநித்தியனே, விஷ்ணுவு மிறந்து போனான், ருத்திரன் முதலான சகல தேவர்களும் நித்தியரல்ல, அனித்தியர்களே ருத்திரன் முதலானமுக்கிய தேவர்களெல்லோரும், இறந்துப்போனார்கள், யாருக்கும் இச்சரீரம் ஸ்திரமல்ல, ஒன்றே ஸ்திரமானது எது வென்றால் ஜல்தி ஜல்தியாக சிவபூஜை செய்து நிஜமுக்தி சாம்ராஜ்யத்தைப் பெறுவதே ஸ்திரமாகும், இதுசாதித்த ஜங்கம பக்தன் நானென்றறிவாய் நந்தி நாதா, இன்னு மிருக்கப்பட்ட தெல்லாம், கானல் நீரைப்போலவும், நீரின்மேல் குமிழிபோலவும், புல்லின்மேல் பனிபோலவும், அப்பிரத்யக்ஷம் மாதிரி தோன்றி யடங்கும், இச்சரீரம் யாருக்காகிலும், ஸ்திரமல்ல,

## (18) விஷ்ணு சிருஷ்டி

### சர்வம் மித்தை, சுலோஹம்

பிராணயோக வியோகஞ்ச தனயோக வியோகத:
நிமிஷம் நிமிஷார்த்தஞ்ச சீக்ரந்து சிவபூஜனம் (141

பிராணயோகம் ஸ்திர மென்றால் அதுவும் ஸ்திரமல்ல, சாயங்கால சந்தையைப்போல பிறிந்துப்போகும், தனம், தான்யம், பெண்ஜாதி, பிள்ளைகள், ஸ்திரமென்றால் அதுவும் ஸ்திரமல்ல, நிமிஷ நிமிஷார்த்தத்திற்குள் சம்சாரமென்பது சாயங்கால மஞ்ஜள் வெய்யிலைப்போலவும், காட்டின் நிலவைப்போலவும் தோன்றி படங்கும்,

ஸ்ரீ ருத்திரௌவாச, சுலோஹம். (2)

மாதா நாஸ்தி பிதா நாஸ்தி, நாஸ்தி பிதுரு சஹோதர :
நாஸ்தி பத்னி தனம் லோஹம் தர்ம மேகந்த் வயம் க்ருடம் (142)

இன்னு மெதுவுங்கூடவராது, தாய் வாராள், தந்தையும், வாரான், அண்ணன் தம்பி அக்காள் தங்கை முதலானவர்கள் யாருங் கூடவரமாட்டார்கள், பெண்ஜாதி பிள்ளைகள்,, தனம், தான்யம், லோஹம், முதலான தெதுவும் தன்கூட வரமாட்டாது, தான் செய்த சிவபூஜையின் பலன் ஒன்றுமாத்திரம் கூடவே வரும், ஆகையால் சீக்கிரம் சீக்கிரமாக சிவபூஜைக்குத் தான தர்ம பரோபகாரம் செய்து, சிவபூஜை செய்வது தனக்கு தர்மசங்கிரஹம், ஹரன் கோபித்தாலும் போகாது, இத்தர்மம் தனக்கல்லாது போகாது, இத்த ருமம் ஒன்றே தன்கூடவே வரும், இதைத் தவிர மற்றொன்றும் கூடவராது, காலன் வருகிறான்' வருமுன்னே ஜல்தி ஜல்தியாக எச்சரிக்கையுடன் சீக்கிரம் சீக்கிரமாக சிவபூஜை செய்யவேண்டியது, இது விஷ்ணுவின் சிருஷ்டி, இன்னும்

(19) பிரஹ்ம சிருஷ்டி, ஸ்ரீ ருத்திரௌவாச, சுலோஹம்.

பிதாமஹஸ்து சகலம் ஜகஸ்தாவர ஜங்கமம்
மேகஸ்த வித்யா ரசனும் கிருமி கீடக சர்வதா (143)
சது : பாதத் விபாதஸ்ச ஷட்சதஸ்யா மிருகஸ்ததா
அண்டஜ ஸ்வேத ஜச்சைவ உத்விஜந்து ஜராயுஜம்
ஸ்த்ரீ புத்ர மித்ர பந்துச்ச தனதான்ய முபக்ரமாத்
இதிசர்வ ஜராதீனும் ப்ரஹ்மாகத சமுத்பவம் (144)
சிருஷ்டீச குருதே பிரஹ்ம பாலனந்து ஜனார்த்தன:
காரேணந்து மஹாதேவம் கர்த்தவ்யம் தரதிய்யதெ (145)
சமாயஞ்ச குணச்சைவ ஸ்த்ரீ புஞ்சம் சன புஞ்சகா
உத்பத்ய ஸ்திதி சம்ஹார தஸ்யவாச பலானிச (146)

---

(குறிப்பு:) மஹா ராஜா துறவில் (3)

பஞ்சபூத மழிந்து போம் பாநுதிங்க ளுடுக்கள் போம்
வஞ்ச வசுரர் மடிந்திடுவர் மாகர் பதம்போம் வல்லரக்கர்
துஞ்சுவார்கள் ‡ போகிபதம் துஞ்சும் பிரம்மன் பதந்தானும்
துஞ்சுந்திருமால் பதந்துஞ்சும் துஞ்சாதொன் றேபரமபதம்
‡ போகி தேவேந்திரன், பத்திராதிபர்

கடசிருஷ்டி யதாதோயம் பூரயித்வா யதா ததா
ஸ்த்ரீணும் புத்தி ரிதீயோதோ கச்ட கச்ட மஹோக்ஷஜா (147)

சர்வமுமான வஸ்துக்களெல்லாம் பிரம்மனின் உற்பத்தியும், விஷ்ணுவின் ஸ்திதியும், ருத்திரனல் லயமாம், அதெப்படியென்ன்றல் பிரம்மன் சகலருக்கும் பிதாமஹன். பிரஹ்மனல் ஜகத்து ஈரேழு (14) உலகம். புவனம், பவனம், அஜாண்டம், பிரம்மாண்டம், சசராசரம், அண்டஜம், பிண்டஜம், அசங்கியாத அப்ஜவாண்ட கேசர, பூசர, புவனசர, ஸ்தாவர, ஜங்கம, மரம், செடி, பூமி, பர்வதங்கள், வாய்வு, பிராணிகள், மேகஸ்த, சமஸ்த, இடி, மின்னல், முகில், இன்னும் மேகத்தின் சிருஷ்டிகள், வித்தை, கலிவித்தை, (11) கோடி அவித்தை, (90) லக்ஷம் உபமந்திரம், அகணித சப்த கோடி மஹா சிவ மந்திரம், அகணித தனுர்வித்தை, சவுதா தாளம் ரசாணும் நவரசம். கனரசம், ஷடுரசம், பஞ்சரசம், மூலரசம், ரச, ரசாயனங்கள், கிருமி, விஷமுள்ளசர்ப்பங்கள், பார்வ கீடக சரகீடக புண்டரீக, முதலான ஹுள (புழு) ஜீவராசிகளுக்குள், நான்குபாத பசுஜாதிகள், த்விபாத(இருகால்)மனுஷ்யன், முதலான நாநாஜீவிகள் ஆறுபாத (ஆறுகாலுள்ள) துமபி. ஈ முதலானதும், மிருகங்கள், பக்ஷிகள். அன்னம், முதலான பக்ஷிகள், சிங்கம், சார்த்தூலம், சரபம் யானை, சமரீ, சல்யபல்ல, அண்டஜம், பிண்டஜம், உத்பிஜம், ஸ்வேதசம், ஜராயுஜம் ஸ்த்ரீ, புருஷ, புத்ர, பவுத்ர, களத்ர. தனம், தவநிதி. நிதானம், அஷ்டமஹைதைஸ்வர்யம் (18) தான்யம, நவபதார்த்தங்கள், ஸ்ரீலிங்கம், புல்லிங்கம், நபும்சகலிங்கம் த்ரிபாதாதிதேவதைகள், நாநாகடம், முக்கிய பரமாத்மா கடஸ்வரூபங்கள், இப்படிச் சர்வ வஸ்துக்களும் பிரம்மனின் உற்பத்தி இன்னும்

சர்வ ஜீவிகளின் கணித சுலோஹம்

அண்டஜம் விம் சதிர் மேகம் லக்ஷ ஜீவந்து திஷ்டச
ஸ்வேதஜம் ஜீவமாத்ரேண ஏக விம் சதி சம்பவம் (148)

ஜராயு ஜேகவிம்சத்ய லக்ஷஜீவஸ்ய சம்பவம்
உத்விஜம் ஏகவிம்சத்ய ஜிவராசிஸ்ச உத்பவம் (149)

லக்ஷதே ராஜஜச்சைவ த்யோதிவெள ஸ்வேஸ்திதம்ஸ்ருணு
கதயாமி கணச்சைவ பிரசாதம் குருமே பிரபு (150)

தசெள தசாஸ்ய பாகேன உன் பெஜம் விம் வதிர்மதா
சது : பாத சமாயுக்தம் செளராசி லக்ஷ ஜீவயோ : (151)

விம்சதேஸ் சப்த லக்ஷம்து. பிசா சோ ரபுமேவச
அஷ்டதே குலயோர் லக்ஷம் தசலக்ஷம் சதுஷ்பதி (152)

தசமேகம் பத்ரிகம்ச தசத்வயேன மிருண் மயோ
செளரா செளசார கீர்வாணே சோடஷேன கிருமிஸ்ததா (153)

ஊர்வஸ்யா சதுரங்கேன, காயத்ரிச் சஸ்ய பச்சிமம்
நாநா யோனி சஹஸ் ராணி, கத்வாச் சைவது மாயயா (154)

சர்வஜீவ யோனி முக சௌராசிலக்ஷ ஜீவராசிகளின் கணிதம் கேள் விருஷப கந்தர் நாயகா, ஜல சரங்களின் குலம். (7) லக்ஷம், சர பூதப்ரேத, பிசாச, பிரம்மராக்ஷச, ஜட்டிக, பேதானம், மருளு, தண்டங்கள் குலம் (7) லக்ஷம்" தரு, த்ருண, கிரி, பூமி, (8) லக்ஷம் எருமை. பசு, யானை, சிங்கம், புலி, முதலான சதுஷ் (நான்கு)பாத மிருகாதிகளின் குலம் (10) லக்ஷம்" கருடன், சாளுவம், சரபம், கண்ட பேருண்ட முதலான பக்ஷிகளின் குலம் (10) லக்ஷம், தேவ கணம், மனுஷ்ய கணம், ராக்ஷச கணம், என்னும் மூவித கணராசி கள் (12) லக்ஷம், தேவர்களின் குலம் (14) லக்ஷம், புழுக்களின் குலம் (14) லக்ஷம் இவையெல்லாங்கூட்டி ஒன்ருய்ச்சேர்க்க யோனி முக சௌராசி லக்ஷ ஜீவராசிகள் குலம், இதற்கு விபரம, அண்ட ஜத்தில் (21) லக்ஷ ஜீவராசிகள் பிறந்தன , சுவேதசத்தில் (21)லக்ஷ ஜீவராசிகள் பிறந்தன, சராயுஜத்தில்(21)லக்ஷஜீவராசிகள் பிறந்தன உத்பீஜத்தில் (21) லக்ஷஜீவராசிகள் பிறந்தன, இப்படியாக நான்கு யோனிகளிலும் சௌராசி லக்ஷ ஜீவராசிகள்பிறந்தன, ஒவ்வொரு யோனியிலும் ஆயிரம் தடவை பிறந்துழன்று அநுபவிக்கின்றன, சமுத்திர அலையைப் போல ஒவ்வொரு கோடி பிறக்கின்றன, ஒவ் வொரு கோடி அனுபவிக்கின்றன, இச்சௌராசி லக்ஷ ஜீவஜந்து க்கள் பிறக்காத யோனியில்லை, மிதிக்காத பூமியில்லை, உண்ணுத ஆஹார மில்லை,காணுத துக்க மில்லை,இப்படி (84) லக்ஷஜீவராசிக ளுக்கும் பூர்வம் என்ருல் கிழக்கு, பச்சிமவென்ருல் மேற்கு யென்றிரண்டு துவாரமுண்டு, அதெப்படியென்ருல்

## (20) இரண்டு துவாரங்கள்.

பூர்வத்வாரமென்பது, குதிரைகர்ப்பத்தில் பிறந்து சௌர்யாசி லக்ஷ ஜீவராசிகளின் கர்ப்பத்தில் ராட்டினத்தைப்போல திரும்பத் திரும்பப்பிறந்துழன்று அனுபவிப்பார்கள், இன்னும் பச்சிமத்வார மாவது,பசுவின் கர்ப்பத்தில் ஜனிப்பது,இன்னும் நாநா யோனியில் சஹஸ்ர (ஆயிர)ம் தடவை திரிந்துத்திரிந்து கடைசியாக காயத்ரீ கர்ப்பத்தில்பிறந்து பிறகு மனுஷ்யர்களின் யோனியில்பிறந்து நரஜன்மமாகிச் சுகத்துடனிருப்பார்கள், ஆனதால் பசுவின் கர்ப் பத்தில்வந்தால்மனுஷ்யன் கர்ப்பத்திற்கு வந்தவனென்றறியவேண் டியது, குதிரை கர்ப்பத்தில் பிறந்தால் நாநா யோனி சௌராசி

---

குறிப்பு:—பூர்வகாலத்தில் வீரசைவ(லிங்காயத)ர்கள் விவாஹம் தீக்ஷை பட்டாபிஷேகம், முதலான சுபகாலங்களில் அசுவத்தி(குதி ரையி)ன்மீதமர்ந்து ஊர்வலம் முதலானவைகள் வருவதில்லையென வும் அப்படி வரக்கூடாதெனவும் நந்தியி.(எருதி)ன்மீதமர்ந்து ஊர் வலம் வருவதுண்டெனவும்இதுவே விதியென்றும் கர்ன பரம்பரை யாகக் கேழ்விப்பட்டதினுண்மை இப்போது வியக்தமாக விளங் குகின்றதல்லவா.

ஆசிரியர்.

லக்ஷ ஜீவராசிகளில் திரும்பித்திரும்பிவருபவனென்றறியவேண்டியது, இது பூர்வ, பச்சிமத்திற்குப் போகும் இரண்டு துவாரங்களென்றறியவும் இவ்விரு துவாரத்தின் சிருஷ்டியும் பிரம்மசிருஷ்டியென்றறியவும்.

## (21) பரசிவ ஜங்கமலிங்கத்தின் சிருஷ்டி

பரசிவ ஜங்கமலிங்கத்தின் சிருஷ்டியைக் கேள் விருஷப கந்தர நாயகா, இன்னும் பூமியின்சிருஷ்டி முதல்ச்சொன்னசர்வஜீவர்களுக்கும் நிலையுண்டென்றாலோ நிலையில்லை, நிபமுமில்லை, இருளில்லை, பகலில்லை, சர்வசூன்ய நிராகாரம். அந்தர வந்தரங்களாகிச் சகல ஜீவிகள் திரிந்துக் கொண்டிருக்கும். ஏனென்றால் காளத்திராவிட மஹாபிரளயத்து சிக்ஷாகுருக்களென்னும் ஜலம் பெருகி மேல் வந்து அனந்தகோடி ஜலப்பிரளயங்கள் மெலுக் கெழும்பும்போது அப்பிரளயத்தின் மேலே பரசிவன் பரப்பிரம்மன் ஆதிநாராயணன் இப்படி மூவரும் தங்கள் தங்கள் பீஜ சக்தியை ஆலம்பிலை செய்திட்டு அந்த ஆலிலையின் மேல் சகல தேவதைகள் கூடிக்கொண்டு உட்கார்ந்தார்கள். இப்படியிருக்க பரமசிவன் ஓர்நாள்பரப்பிரம்மன் ஆதிநாராயணன் இவ்வுபய மூர்த்திகளின் முகத்தைப் பார்த்தான். ஏனென்றால் ஜகத்தைச் சிருஷ்டிக்க வேணுமென்றுப் பார்க்கவும், ஆதிநாராயணன் பரப்பிரம்மன்இவர்கட்கு ஜகத்தைச் சிருஷ்டிக்கும் சக்தி பிறக்காமையாலிவர்கள் அப்பர சிவனை நமஸ்கரித்து ஜெகத்தை சிருஷ்டியுங்களென்று விண்ணபிக்கவும் ஆதி பிரம்மன் ஆதி விஷ்ணு இவ்விருவர் வார்த்தையுங் கைக்கொண்டு அப்பர சிவ ஜங்கமலிங்கம் பிரளயத்தின் மேல் தன் கரணேந்திரியங்களின் கடைவிரலினால் அப்புறமெடுத்துவைக்கவும், அவ்விடமிருவர் அசுரர்கள் பிறந்தார்கள். அவர்களெப்படிப் பட்டவர்களென்றால் நிலையில்லாத, நிபமில்லாத, அகணித பிரமாணயோசனையுயரமும், அவ்வள வகல சரீரமுமுள்ள தைத்தியர் பிறந்தார்கள், அவர்களி லொருவன் பெயர் மது, மற்றொருவன் பெயர் கைடபன், இம்மது கைடபரிருவருக்கும் (66) கோடிதைத்தியர்கள் பிறந்தார்கள், இவர்கள் முன் சொன்னவர்களின் உயரமும் அகலமுமுள்ள தேஹத்தையுடைய இவர்கள் அகணித பிரம்மாண்டங்களை முறித்து முழுங்குவார்கள், இப்படி (66) கோடிதைத்தியருக்கு முக்கியமான மது கைடபர்களைப் பரசிவன் நிர்மித்து விட்டபடியால் இம்மது கைடபர்களினாலான (66)கோடிதைத்தியர்கள்ருத்திர சிருஷ்டியாகயா லிவர்கள் பிரம்ம சிருஷ்டியினாலான சகல தனுசரங்களையும் சகல கேசரஜீவிகளையும் ஒடித்துத்தின்னுமிவர்களை அப்பர சிவன் பார்த்து கால பைரவனிடம் சொல்லுவதாவது, கேசரஜீவிகளை முறித்து தின்னும் மதுகைடபர்களைக் கொன்று இம்மஹா ஜலப்பிரளயத்திற்கு சம்ஹாரஞ் செய் யென்றுச் சொல்லவும்,

ஸ்ரீ ருத்ரேள வாச, சுலோஹம்.

யக்ஷம்ச பைரவச்சைவ அஷ்டைதே ரஹ்தெதே ஜச:
சஷ்டாதி விததாவ்யாளம் தவவர்க்கம் விவர்ஜ்ஜயேத் (155)
ஆதாரமங்குடம்சாரி பக்ன சித்ர னராவணி
கல்பயே க்ருஹசாரிண்யோ பாரிஜாதேனமுத்பவ: (156)
ஓம் புவர்ப் புவனே வர்க்கம் ஓம் மஹா வசனேஸ்வரி
ஓம்தப: சசத்யத்ச சத்யதா சத்ய வாததி (157)
விம்சதிஸ்வர்க்க தம்துருஷ்ட காமினி ஸ்வர்க்க மூல்யனீ
அதளாயஸ்வயம் ப்ரிய்யே விதளோ சுதளோர்ஜ்ஜூபு (158)
மஹாதள பதேந்த்ரீணும் தளாதளேன ருஷ்யசு
பாதாளே சப்த தக்கேய சௌர்யாசி சாரநிர்மிதம் (158)

அப்பரசிவன் காலபைரவனுக்கு யென்ன சொன்னுரென்றல், அம்மது கைடப ரென்னும் தைத்தியரின் முன் தலையைப் பிடித்து பாகிப்பா யென்றுச் சொல்லவும், அப்பரசிவன் ஆக்கினேயிலைக் காலபைரவன் மாயாவேஷ மெடுத்துப்போய் அக்கேசர ஜீவிகளைத் தின்றுக் கொண்டிருந்த அம்மது கைடப தைத்தியரின் முன்தலையைப் பிடித்து பாகிக்க (பிளக்க) வும். அப்பர சிவன் உபயராக்ஷசரை அதோ துவாரத்துள் அழுத்தி காளத்திராவிட காளதுந்து காலப்பிரளய மென்னும் ஜலப்பிரளயத்தின்மேல்போடவும்அம்மஹா ஜலபிரளயத்தில் லயமானுர்கள்,அப்பொழுது சதுர்த்தசபுவனம், பவனம், பூமிகளாயின, இப்படி உபயதைத்தியரை பரசிவன் மர்த்தித்து பிரளயத்திற்கு லயம் செய்துத் தன் அஷ்ட மதகரிகளினுல் அஷ்டதிக்கரிகளை நிர்மித்தான்,

ஸ்ரீ ருத்ரேள வாச, சுலோஹம்.

ஐராவத: புண்டரீகோ வாமன: குமுதோஞ்ஜன:
புஷ்பதந்தா சார்வ பௌம சுப்ரதீ கஷ்டதிக்கஜ: (160)
வ்யாளம் கார்க்கோட பத்மாளி அனம்தோ பலிதக்ஷகா
சலிசேஷமஹீந்த்ராணி அஷ்டமாம் கிரிப்பிர கீர்த்தித: (161)
த்ரிகூட சேஷமந்தாரோ ஹரிணே முக்யதாம்பரி:
பௌஸ்கரோ வாஹினீகந்தோ அஷ்டசைலப் பிரகீர்த்தித: (162)
மூலவர்ணே அஸ்வதாணும் ப்ரஹ் மண்யோ வடபத்ரயோ
நிதம்ப வுதும் பரச்சைவ மந்தார: பாரிஜாதக: (163)
க்ஷாரோ இக்ஷூ மது சர்ப்பி ததி துக்தா பயஸ்ததா
ஜம்பு ப்லக்ஷ குசக்லௌம்ச சாகாசால்மலி புஷ்கர: (164)
லக்ஷம்து த்விகுணச்சைவச தார்த்தம் கோடிமானயோ:
க்ராவஜச்ச மத ஹந்த் ராத்யம் பஞ்ச சதகோடி யோஜனம் (165)
முக்ஷூநட் க்ஷத்ர சௌருப்யம் சந்த்ர தண்டு வ்ராஜம்ஜது:
மேகமண்டல நைகுஹ்யே அந்தரம்ச மஹாந்தரம் (166)

இஃது ஸ்ரீ ருத்திரபாரத மென்னும்
பிரஹ்மாண்ட புராண சங்கிரகம் முற்றிற்று,

உ

நிஜகுருலிங்காய நம :

## (1) ஜாதக்கர்ம லிங்கதாரணை விதி.

அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

*சந்திரகாந்தத் தேனுந்தபனகாந்தத்திலேனுஞ்*
*சுந்தரசயிலந்தன்னிற்றோன்றிய சிலையிலேனும்*
*வந்துறுபடிகத்தேனு மகிழ்வாண லிங்கத்தேனு*
*முந்தழகுறுமி * லிங்கமொன்று கொள்கிற்கமன்றே.*

சந்திரகாந்தக் கல்லிலாயினும் (சந்திரனைக் கண்டால் நீரை யுமிழுங்கல்) சூரியகாந்தக்கல்லிலாயினும் (சூரியனைக் கண்டால் நெருப்பையுமிழுங்கல்) ஸ்ரீ ஸைலமலையிலுள்ள கல்லிலாயினும், அல்லது படிகக்கல்லிலாவதும், வாணலிங்கத்திலாயினும் (நர்மதா நதியிலுள்ள சிவலிங்கத்திலாயினும்) ஆக இவ்வைந்து கற்களிலே தாவதொருகல்லினால் செய்த சிவலிங்கத்தை வர வழைத்து

(இஃது சித்தாந்த சிகாமணி, 5-வது லிங்கதாரணத்தலம்)

சுருதி சுலோஹம்.

*வீரசைவஸ்திதானும்ச ஸ்திரீணும் கர்ப்பாஷ்டமே குரு :*
*பஞ்சசூத்ரக்ருதம்லிங்கம் தாரயேத் விதியவச்சுபம்*
*அர்த்தோதயேபாப்ய தஸ்யாத்பதனே சைவதேசிக :*
*பூர்வசம்ஸ்காரிதம் லிங்கம்சிசோ : கண்டேசதாரயேத்*

வீரசைவ ஸ்த்ரீகள் கர்ப்பமாயிருக்கும் எட்டாவது மாதத் திலேயே

சுருதி சுலோஹம்.

*லிங்க விருத்த சமம்பீடம், தீர்க்கம் விஸ்தார மேவச*
*ததர்த்தம் கோமுகம் சைவ பஞ்சத்சூர முதாஹ்ருதம்*

இம்மாதிரி யளவாகச் செய்து முடித்த லிங்கத்தை குரு க்களினாலாவது. ஐங்கமய்ய ராலாவது சம்ஸ்காரம் செய்வித்து

---

* அத்யதிஷ்டத்த சாங்குல, நிருபம, நித்ய, நிராமய, நிர்க்குண நிரஞ்ஜன நிர்த்வந்திய, அவ்யக்த, அவ்யவ பராத்பர, அத்விதிய பிரஹ்மம் என்னும் பதத்திற்கு வாச்சியமான பரவஸ்துவே இவ்விலிங்கமாகும்.

அவ்விலிங்கத்தை விதிப்பூர்வகமாகத் தாய்கழுத்தில் தரிக்கவேண்டியது. மற்றும். பிரசவகாலத்தில் அர்த்கபிண்டோதய காலத்திலாவது அல்லது பூமிக்கு வந்தபிறகாவது. முன் (8) ம் மாதம் சம்ஸ்காரம் செய்து தாய்கழுத்தில் கட்டியிருக்கும் அல்லது அவ் வீட்டு யஜமானன் அல்லது யஜமானியிடம் கொடுத்து வைத்திருந்தலிங்கத்தை சிசுவின் கழுத்தில் லிங்காதாரணை விதிப்படிதரிக்க வேண்டியது. இதுசாத்திய மில்லாமலிருந்தால் மூன்றும் நாளும் அல்லது (13)ம் நாள் வீடுமுழுவதும் சுத்தி செய்து மெழுகி கோலங்களிட்டு மாவிலைத் தோரணங்கள் கட்டியலங்கரித்து ஜங்க மய்யரால், (13)-ம் நாள் குழந்தைக்கு சிவலிங்கதாரணம் செய்விப்பதற்காக சிவபூஜாகிரகத்தை மெழுகி கோலமிட்டு தோரணங் கட்டி குருபீடம் போட்டு எல்லா பூஜாசாமக்கிரியைகளையும் தயாரித்து. குருக்களை அல்லது ஜங்கமய்ய ரையழைத்து பீடத்தின் மேலாரோகணிக்கச்செய்து பாதார்ச்சனை செய்துக்கொண்டு தூள பாதோதகத்தை அவ் வீட்டின் எல்லாவிடங்களிலும் புரோக்ஷித்து தரிக்கத்தக்க பஞ்சசூத்திரத்து லிங்கத்தின் மேலேயும் புரோக்ஷித்து (தெளித்து) அவ் விலிங்கத்தின் பீடம் அசையாமல்படிக்கு பத்திரமாக நூல் சுற்றி பீடத்தின் பேரில் வைத்துக்கொண்டிருக்கவேண்டியது பிறகு ஆசார்யன் வலது புரம் கீழே அரிசியை மந்திரப் பூர்வகமாகப் பரப்பி ஒரு சிவகலசம் மந்தி ரோக்தமாக பிரதிஷ்டைசெய்து அக்கலசத்திற்கும் சூதகாக்கிரகத்தில் சிசுவுஉள்ள ஸ்தானத்திற்கும் சூஸ்திரத்தைக் கட்டி அக்கலசத்தில் சிவனை ஆவாஹனம் செய்ய

## (2) சிவஆவாஹன மந்திரம்.

வ்யோமவ், யோமாய வித்மஹே சூட்ம சூட்மாய தீ மஹி
தந்நோ சிவ : பிரசோதயாத்

என்று ஆவாஹனம் செய்து உபசார பூஜைகளெல்லாம் மந்திர பூர்வகமாகச்செய்து, கலசத்தின்மேல் ஹஸ்தம் வைத்து 108தடவை பஞ்சாக்ஷரி மந்திரத்தை ஜெபித்துப்பிறகு அவ்வீட்டின் யஜமானனாவது அல்லது இதராவது ஆசார்யனுக்கு சாஸ்டாங்க நமஸ்காரம் செய்து ஆசார்யன் அருகில் உட்கார்ந்துக் கொண்டு

## (3) சிசு தந்தையின், சங்கல்பம்.

தேசகாலாதிகளைச் சொல்லிப் பிறகு

ஏவம் குணவிசேஷணவிசிஷ்டாயா மாபா புண்ய சுப முஹூர்த்தேன அஸ்யாம் சுபதிதௌ, மமதர்ம பத்தினியாம் ஜாதஸ்ய குமாரஸ்ய ஆயுஷ்யாபி விர்த்யர்த்தம், ( ) கோத்ரோத்பன்னஸ்ய சிசோர்ப்பவித்வதோஷாபநோதனத்வாரா, லிங்காங்கித்வ சித்யர்த்தம் ஜாதக் கர்மாக்யம் கர்மகரிஷ்ய, மாணஸ்ததங்க நாந்தி சோபன தேவதாப்ரீத் யர்த்தம். நாந்தி சமாரதாணுக்யம் கர்ம கரிஷ்யமாண ஸ்ததாதௌ சுத்தியர்த்தம் விருத்யர்தம் அப்யுதயார்த்தம்சமாஹேஸ்வரைஸ்ச :, ஸ்வஸ்தி புண்யாவா, சனம் கரிஷ்யே

என்றவ்வீட்டின் யஜமானனாவது அல்லது சிசுவின் தந்தையாவது அல்லது இதரராவது இச்சங்கல்பம் சொல்லி கீழே யபிஷேக பாத்திரத்தை வைத்து தாரணம் செய்யத்தக்க சிவலிங்கத்தை இடது ஹஸ்தத்தில் வைத்து மந்த்ரோக்தமாக பஞ்சாமிர்தாபிஷேகம் செய்து விபூதி சந்தனம் புஷ்ப முதலான வைகள் மந்திரப்பூர்வகமாகத் தரிப்பித்து சிவலிங்கத்தை ஜலாதி வாசம் செய்விக்கவும்

## (4) ஜலாதிவாச சங்கல்பம்.

தேசகாலாதிகளைச் சொல்லி

ஏவம் குணவிசேஷண விசிஷ்டாயாமாபா புண்யசுபமுஹூர்த்தேன அஸ்யாம் சுபதிதௌ லிங்கஸ்ய கர்ஷணாதி தோஷ நிவிர்த்யர்த்தம் ஜலாதி வாசம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி ஒரு பாத்திரத்தில் கங்கா ஜலமும் பஞ்சகவ்யமும் விபூதியும் போட்டு அதில் சிவலிங்கத்தை தை யிரண்டு தர்ப்பைகளுடன் சேர்த்திரண்டு வஸ்திரம் சுற்றி பாத்திரத்தில் வைத்து இடக்கையினலைப் பாத்திரத்தைப் பிடித்து, 108 தடவை ஓம் நமசிவாய : வென்னும் சடாக்ஷரி மந்திரத்தை ஜபித்து சிவலிங்கத்தைப் பாத்திரத்திலிருந்தெடுத்து வஸ்திரத்தை யவிழ்த்து சுத்தோதகாபிஷேகம் செய்து பஞ்சோபசாரத்தால் பூஜித்துப் பிறகு

## (5) தான்யாதிவாச சங்கல்பம்.

ஏவம்குணவிசேஷணவிஸிஷ்டாயாமாபாபுண்யசுபமுஹூர்த்தேன, அஸ்யாம் சுபதிதௌ சிவலிங்கஸ்ய தேவதாபீஜத்வ சித்யர்த்தம், தான்யாதி வாசம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி சிவகலசத்தின் ஈசான்யதிக்கில் பூமியைச் சுத்திசெய்து அஷ்டதளகமலக் கோலமிட்டு அதின் பேரில் அரிசிநிரைத்த பாத்திரத்தை வைத்து சிவலிங்கத்தை (2) தர்ப்பை, (2) வஸ்திரத்தால் சுற்றி கிழக்கு திக்கில் லிங்கத்தின் சிரசு இருக்கும் படியாகவும் கோமுகம் அதோ (கீழ்) முகமாயிருக்கும்படியாகவும் அரிசியில் வைக்கவும்

மந்திரம்

தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி
தந்நோருத்ர: பிரசோதயாத்

என்றிம் மந்திரித்தை உச்சரித்து தானியபாத்திரத்தில் படுக்கவைத்து அதை இடது கையில் பிடித்து பிராணாயாமம் செய்து (100) அல்லது (108) தடவை சிவபஞ்சாக்ஷரி மந்திரத்தால் மந்திரித்துப் பிறகு அச்சயன ஸ்தானத்திலுள்ள சிவலிங்கத்தை யெடுத்து மதுவர்க்க அபிஷேகமாவது பஞ்சாமிர்த அபிஷேகங்களாலாவது தனித்தனியாகச்செய்து

பஞ்சப்பிரம்மமந்திரங்களினால் சுத்த ஜலாபிஷேகம்செய்து விபூதி சந்தன முதலான பஞ்சோபசாரமாவது, அஷ்டோபசாரமாவது லிங்கார்ச்சனை விதியில் சொன்ன மந்திரப்பூர்வகமாகப் பூஜிக்கவேண்டியது.

ஆரம்ப முதல் முடிவுவரை ஐந்து தடவை அபிஷேகாதி பூஜைகள் செய்யவேண்டியது, பிறகு

## (6) லிங்க பிராணப் பிரதிஷ்டை.

ஓம் அஸ்யஸ்ரீ சிவலிங்க பிராணப்பிரதிஷ்டாபன மந்த்ரஸ்ய பிரஹ்மருஷி : தேவீகாயத்ரீசந்த : ஓம் பீஜம் ஹ்ரீம்சக்தி : க்ரௌம் கீலகம் சிவலிங்க பிராணப்பிரதிஷ்டார்த்தம்ஜபே விநி
ஓம் ஹ்ரீம் க்ரவும் யம்ரம் லம்வம் சம்ஷம் ஸம் ஹம்ச : [யோக :
அமுஷ்ய பிராண இஹஸ்தித : அமுஷ்ய ஜிவ இஹஸ்தித :
அமுஷ்ய சர்வேந்த்ரியாணி காயவாங்மனஸ் சக்ஷுஸ்ஶ்ரோ

சுரோத்ர ஜிம்ஹஹா க்ராண பிராண. இஹைவாகத்ய சுகம் சிரம் திஷ்டந்து சுவா : இதிலிங்கப் பிராணப்பிரதிஷ்டாபனம் குர்யாத்

என்று லிங்கத்திற்கு பிராணப்பிரதிஷ்டை செய்தபிறகு

## (7) தியானம்.

ரக்தாம்போதிஸ்த பூதோல்ல சதருண சரோஜாதி ரூடாகர ப்ஜை : || பாசம் கோதண்டமிஷ்சோத்பவமளிருண மப்யம் குசம் பஞ்சபாணன் || பிப்ராணஸ்ருக்க பாலந்த்ரீணயன விலசத்பீன வக்ஷோரு ஹாட்யா || தேவீபாலார்க்க வர்ணபவது சுககரீப்ராண : சக்தி : பரான :

என்று தியானித்து புது வஸ்திரத்தைத்தான் முசுக்கிட்டுக் (முக்காடுபோட்டுக்) கொண்டு

மந்திரம்

ஓம் அமுஷ்பபிராண இஹப்ராண : ஸ்சோஹம் ஸ்சோஹம்

என்றுச்சொல்லி பாதத்திலிருந்து நாபி பர்யந்தம் பிரஹ்ம பாகத்தையும்.

ஓம் அமுஷ்யஜீவ இஹஸ்தித : ஸ்சோஹம் ஸ்சோஹம்

என்றுச்சொல்லி நாபியிலிருந்து ஹிருதயம்வரையில் விஷ்ணு பாகத்தையும்.

ஓம் அமுஷ்ய சர்வேந்த்ரியாணி வாங்மனஸ்சக்ஷு : ஸ்ரோத்ர ஜிஹ்வா கிராண இஹைவாகத்யசுகம் சிரந்திஷ்டந்து ஸ்வா :

என்றுச் சொல்லி இருதயத்திலிருந்து மஸ்தக பர்யந்தம் ருத்திரபாகத்திலும் நியாசம், ஸ்பர்சனம் செய்துப் பிறகு

## (8) பிராணேந்திரியப் பிரதிஷ்டை.

ஓம் அம்ஹிரீம்க்ரோம் அமுஷ்ய பிராண இஹப்ராண : சோஹம் சோஹம் || ஓம் ஆம் ஹிரீம்க்ரோம் அமுஷ்ய ஜீவ இஹஸ்தித : சோஹம் சோஹம் || ஓம் அம் ஹிரீம் க்ரோம் ஓம் அமுஷ்ய சர்வேந்திரியாணி சோஹம் சோஹம் || ஓம் அம் ஹிரீம் க்ரோம் வாங்மனஸ்சக்ஷு : ஸ்ரோத்ர ஜிஹ்வா க்ராண பிராணே பானவ் யானோதான சமானநாக கூர்மக்ருகர தேவதத்ததனஞ்ஜயாதி தசபிராண இஹாகத்யா கத்ய ஆகச்சாகச்ச ஆகர்ஷயாகர்ஷயாசுகம் சிரம்திஷ்டந்து ஸ்வா: அம்ஹிரீம்க்ரோம் டம் ட்டம் டம் ட்டம் உம் வாக்பாணிபாத

பாயூபஸ்தாத்மனே ஓம் அம்ஹ்ரீம்க்ரோம் ஐம்தம்த்தம் த்தம் நம்
த்வக் சக்ஷு: ஸ்ரோத்ர ஜிஹ்வாக் ராணத் மனே
ஓம் அம் ஹ்ரிம்க்ரோம் ஓம் பம் ப்பம் பம் ப்பம் மம் ளம்
மனோபுத்யஹங் காரசித்த விக்ஞா நாத் மனே
ஓம்அம்ஹ்ரிம்க்ரோம்யம் ரம் லம் வம் சம் ஸம் ஷம் ஹம் ளம் க்ஷம்
வசனதானகமன விசர்ஜஜனனந் தாத்மனே
அமுஷ்யபிராண இஹபிராண அமுஷ்யஜீவ இஹஸ்தித :
அமுஷ்ய சர்வேந்திரியாணி காயவாங் மனஸ் சக்ஷு ஸ்ரோத்ர
ஜிஹ்வாக்ராண வாக்பாணிவாத பாயூபஸ்த்தாஸ் ருக்மேதோஸ்தி
மச்சாசுக்ல மனோபுத்யஹங்கார சித்தானி இஹாம் ருத
லிங்கமத்யே சமாவிஸ்வ சுகம் சிரம் திஷ்டந்து ஸ்வா

என்றுச்சொல்லி பிராணேந்திரியப் பிரதிஷ்டாபனஞ் செய்தபிறகு

## (9) பிராத்தனம்.

அசுநீதெ புனரஸ்மாசு சக்ஷு : புன : பிராண மிஹநோ தேஹிபோகம், ஜ்யோக் பஸ்யேமசூர்ய முச்சரந்த மநுமதெம் ருடயாநஸ்வஸ்த்தி, அக்ரீம் ஹ்ரோம் ஓம் மஹாபத்ம வனம்த ஸ்தகாரண நந்தவிக்ரஹெ
சர்வபூத ஹிதெமாதெவஹ்யஹி பரமேஸ்வரி
ஓம் அம் ஹ்ரீம் க்ரோம் ஆவாஹி தோபவ ஆசிஞேபவ
அவகுண்டிதோபவ ப்ரசிதோபவ சுப்ரசன்னோ பவ
அஸ்மின் அமிர்தலிங்க மூர்த்தி மத்யே மஹாதேவம் பிரசன்னம்
குருகுருஸ்வா : ஹம் ஸ்லாம் ஹம் ஸ்லீம் ஹம் ஸ்லூம் ஹம்ஸ்லைம்
ஹம்ஸ்லௌம் ஹம்ஸ்ல : ஆகச்சாதித்ய மத்யஸ்த பார்வதீ சஹித
பிரபோ அஸ்மின் பிம்பே ப்ரதிதினம் சன்னிதிர்ப்பவ சங்கரா

என்று பிராத்தனைச் செய்து அர்க்யன பாத்பாசமங்களைக் குடுத்து முக்காடு போட்ட வஸ்திரத்தை யெடுத்துவிட்டு

## (10) பஞ்சப் பிரஹ்ம நியாசம்.

ஓம் ஹாம் நம் சத்யோஜாதாய நம : என்று பாதத்திலும்
ஓம் ஹிரீம் மம் வாமதேவாய நம : என்று குஹ்யஸ்தானத்திலும்
ஓம் ஹூம் சிம் அகோராய நம : என்றிருதயத்திலும்
ஓம் ஹைம் வாம்தத்புருஷாய நம : என்று முகத்திலும்
ஓம் ஹௌம் யம் ஈசானாய நம : என்று சிரசிலும்

இப்படியாக பஞ்சப் பிரஹ்மநியாசம் செய்து பிறகு ஓம் சாம்பசதா சிவாய நம : " என்னும் நாமமந்திரத்தால் பஞ்சோப சார பூஜை செய்து, ஓம் நிதனபதயே நம : " என்று சிவலிங்கத்

தை யெடுத்து வாமஹஸ்தத்தில் (இடக் கையில்) வைத்து பூர்வத்தில் பூசித்த கலசோதகத்தை (கலச தீர்த்தத்தை) ஸ்தாபன கலசாபிஷேக மந்திரத்தாலாவது ருத்ரசூக்த மந்திரத்தாலாவது புருஷசூக்த மந்திரத்தாலாவது அபிஷேகித்த பிறகு

சரணம் பவித்ரம் விததம் புராணம் புராணம் யேனபூதஸ்தாதி
துஷ்க்ருதானி தேன பவித்ரேண சுத்தேன பூதா :
அதிபாப்மான மராதிம் தரேம

என அபிஷேகம் செய்து சோடசோப சாரத்துடன் பூஜித்துப் பிறகு

## (11) குருபாதோதகாபிஷேக மந்திரம்.

யஸ் யஸ் மிருத்யாச நமோக்தியாதப : பூஜாக்ரியாதி ஷு
ந்யூனம் சம்பூர்ண தாம்யாதி சத்யோ வந்தே சதாசிவம்
மந்த்ராஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் மஹேஸ்வர
யத்பூஜிதம் மயாதேவ பரிபூர்ணம் ததஸ்துமெ
அனயாத்யாநாதி ஷோடசோபசார பூஜயாபகவான் சர்வாத்மக
ஸ்ரீ சாம்ப சதாசிவ சுப்ரீத சுப்ரசன்னோ வரதோபவது

என்றுச் சொல்லி அக்ஷதையும் ஹிரண்ய மென்னும் தங்கமும் ஜலமும் சேர்த்து அபிஷேகஞ் செய்து பிறகு சிவலிங்கத்தை பட்டு வஸ்திர மல்லது மடி வஸ்திரத்தில் சுற்றிக்கட்டின பிறகு அச்சிசுவுக்குமுன் சுற்றினசூஸ்திரத்தை விடாமலெடுத்துக் கொண்டுவந்து குருவின் சமீபத்திலுட்கார்ந்து

## (12) காயத்ரீ மந்திரம். (1)

ஓம் பூர்புவ : ஸ்வ : தத்ச விதுர்வரேண்யம் பர்க்கோ
தேவஸ்யதீமஹி தியோயோந : ப்ரசோதயாத்.

என்று சொல்லியச் சிசுவுக்குக் குருபாதோதகம் பஞ்சகவ்யங்களை மூன்று தரம் புரோக்ஷித்து (தெளித்து) பிறகு

## சிசுவுக்கு பஸ்மதாரண மந்திரம். (2)

திரயம்பகம் யஜாமஹெ சுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருக மிவபந்தநான் மிருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்
ஓம் சிவாய நம : விபூதிம் தாரயாமி,

என்று சிசுவின் நெற்றியில் விபூதி தரித்து அச் சிசுவி னிரண்டு செவிகளிலும் மஹா மந்திர மாகிய பஞ்சாக்ஷர மந்திர முபதேசித்துப் பிறகு சிசுவின் கண்டத்தில்

## லிங்கதாரண மந்திரம் (3)

ஓம் லிங்கதாரணம் த்ரயோ வேதா : சிவலிங்கம் தாரயந்தி
தஸ்மாத்தேவா சிவலிங்கம் தாரயந்தி
யோவை லிங்கதாரணம் குர்யாத் நமல்க சோபவந்தி
நஸ்வச சோபவதி சுகாத்யலிங்க தாரயந்தி சோர்க்க
ருதாலிங்க தாரயந்தி ருஷயஹ சிவலிங்கம் தாரயந்தி
அஜஹரிமுகா சிவலிங்கம் தாரயந்தி சுரோந்த்ரா :
தைத்யா : சிவலிங்கம் தாரயந்தி தஸ்மாத்தேவாசிவலிங்கம்
ஓம் நமோ பிரஹ்மணே லிங்கதாரணம்வே அஸ்மின்
நிராகரணே தாரயேதா பூபாஸ் சம்கர்ண யோஸ்ருதம்
மாச்சோர்த்வம் மமாயுஷ்யம் இத்யனேன மந்த்ரேண
சிசோ கண்டே சிவலிங்கம் தாரயேத் :

இம் மந்திரப்பூர்வகமாக சிசுவின் கண்டத்தில் சிவலிங்க தாரணம் செய்த பிறகு

## யக்ஞோபவீத மந்திரம் (4)

யக்ஞோப வீதம் பரமம் பவித்ரம் பிரஜாபதெர்யத் சஹஜம் புரஸ்தாத்
ஆயுஷ்ய மக்ரச ஹ்யம் பிரதிமும்சுப்ரம் யக்ஞோப வீதம் பலமஸ்துதேஜ :

என்று சொல்லி யக்ஞோப வீதம் (சிவலிங்கம்) தரித்த பிறகு

## (13) சிசுவுக்கு ஆசீர்வாத மந்திரம்

நமோ நமோ பவதிஜாயமனோம் தம்கேதுருஷசாமேத்பக்ரேபாகம்
தேவேப்யோ விதத்யாயன்ப்ர சந்த்ரமா : ஸ்திரதரதீர்க்க மாயு :
இதிவேத வாக்யெ நாசீர்வாதம் தத்யாத்

என்று ஆசீர்வாதம் செய்த பிறகு அந்த குருவினாலேயே சிசுவுக்கு நாமகரணம் செய்வித்துப் பிறகு பாதபூஜா விதியில் சொன்னபிரகாரம் குருபாதபூஜைசெய்து அச்சிசுவுக்கு பாதோதகம் கொடுத்து அனைவரும் பாத தீர்த்தம் வாங்கிக்கொண்ட பிறகு, சிசு தந்தையானவர் நெய் தேன் ஒருபாத்திரத்தில் கலந்தெடுத்து வந்து தாயின் துடையின்பேரில் கிழக்கு முகமாகப் படுக்கவைத் திருக்கும் சிசுவின் மஸ்தகத்தைப் பிடித்து.

## (14) நெய் தேன் மந்திரம். (1)

மேதாங்தே தேவஸ்சவிதா மேதாம் தேவி சரஸ்வதி
மேதாம்தெ அஸ்விஞே தேவ வாதத்தாம் புஷ்கரஸ்ரஜாத்
த்வயிமே தாம்த்வயி ப்ரஜாத்வை யக் நிஷ்தேஜோ ததாது
த்வயிமேதாம் த்வயிப்ரஜாம் த்வயிசூர்யோ பாஜோ கதாது

என்று சொல்லி சிசுவின் வாயில் நெய் தேனை கொஞ்சம் விரலால் தொட்டு வைத்துப் பிறகு இத்தேன் நெய்யை தர்ப்பையினுல் தொட்டு

## ஸ்தன மந்திரம். (2)

சசிரா ஜாதவேதா: அக்ஷரம்பரமம்பதம்தேவனுகாம்சிரஉத்தமம்
ஜாதவேதசெ சிரசி மாதவெ பிரஹ்ம பூர்ப்பு வஸ்வரோம்

என்று தன் பத்தினியின் வலது ஸ்தனத்தில் தடவி

## (15) ஸ்தனப் பிராசனமந்திரம்.

அயம்குமாரோ ஜராம்தயத் தீர்க்கமாயு:
யஸ்மைத் வகாம் ஸ்தன ப்ரப்யாயா யுர்வர்ச்சோயசோபலம்

என்றுசொல்லி சிசுவுக்கு முதலில் வலது ஸ்தனத்தை குடிப்பித்துப் பிறகு லிங்க தாரணம் செய்த வரும் (5) பேர் சிவலிங்க தாரணமுள்ள மாங்கல்ய ஸ்ரீகளுக்கும் முன்னமே அமுது சொல்லிவந்து பிரசவித்தவளாவது அல்லது அவ்வீட்டில் யாராவது மேற்படி மாங்கல்ய ஸ்த்ரீகளில் ஒருவருக்குப் பூசித்துப் பிரசவித்த தாய்குழந்தையுடன் நமஸ்கரித்து அவராலாசீர்வாதம் பெற்று ஏணைகட்டி ஏணைபூசை போட்டு குழந்தையை ஏணையில் படுக்கவைத்துவிட்டு எல்லோர்க்கும் அமுதளித்து தக்ஷிணை தாம்பூலம் கொடுத்தனுப்பவேண்டியது. அவர்கள் ஆசீர்வாததால் ரோகமற்று சுகஜீவிகளாக வாழ ஏதுவாகிறது எவ்வித முகாந்தரங்களைக் கொண்டும் குழந்தையின் கண்டத்தி (கழுத்தி) லுள்ள சிவலிங்கத்தை யப்புறப்படுத்தி வைக்கலாகாது. பிறகு ஒரு வருஷத்தில் முடியிறக்குவதும் 3 அல்லது 5 வருஷத்தில் ஜடைபிரிப்பதும் என்று சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. பிறகு 8வது வயதில் தீக்ஷை செய்விப்பது உத்தம மென்றும், 12, வயதில் செய்விப்பது மத்திம மென்றும், 16. வயதில் செய்விப்பது கௌணம் அல்லது அதம மெனவும் மற்றும் தீக்ஷை செய்யாமல் விவாஹம் செய்யக்கூடாதென்பது சாஸ்திரோக்தமாகயால் ஆண் பெண் சகல குழந்தைகளுக்கும், 12, வயதில் ஜங்கமய்யராலாவது பட்டாதிகாரியாலாவது ஆசார்யனுலாவது திக்ஷை செய்வித்த பிறகே விவாஹம் செய்யவேண்டியது.

(முற்றிற்று) இஃது சுயம் புரோஹிதம்.

# ஜங்கம ரென்பது யார்?

—o—

ஜகத்தாதியில் சக்திவிசிஷ்டாத்வைதாத்மகமான வீரசைவ(லிங்காயுத) மதத்தை பரமபூஜியர்களாயுள்ள ஸ்ரீமத்ஜகத்குருக்களான பஞ்சாசார்யர்கள் ஸ்தாபித்திருப்பதல்லாமல் இவர்கள் வியாசர், அகஸ்தியர், சானந்தர், தூர்வாசர், ததீசி முதலான மஹரிஷிகளுக்கும் உபதேசம் செய்திருப்பதுமல்லாமல் இப்பரதகண்டத்திலுள்ள அநேக மஹாராஜர்களையும் தங்களுடையசிஷ்யர்களாகச் செய்துக்கொண்டு அவர்களா லனேகானேக தானசாசனங்களையும் மற்றும் வர்ஷாசன (வருட) காணிக்கைகளையும் பெற்றிருப்பதும் தவிர இப்பரத கண்டத்தில் சர்வதோ முகமாக வியாபித்துள்ள வீரசைவ மதத்தின் ரக்ஷணை சிக்ஷணைகளுக்காக பிரதியொரு கிராமங்களிலும்கூட கிளை மடங்களையும்ஸ்தாபனம்செய்திருக்கிறார்கள், இம்மடாதிபதிகளான சரமூர்த்திகளே ஜங்கமர்களென உலங்களிலும் சாஸ்திரங்களிலும் பிரசித்தர்களாக யிருந்திருக்கிறார்கள், இம்மஹான்களுடைய தபோ பிரபாவத்தினால் வீரசைவ(லிங்காயுத)மதமானது உலகில் வெகுபூஜியமதமெனச் சிறந்து விளங்கி வருகிறது, இச்சங்கம மூர்த்திகளின் அபாரமான மஹிமையைத்தெரிந்து பரதகண்டத்தை ஏகசக்கிராதிபதியாக அரசாண்ட அனேகானேக ஹிந்து மஹாராஜாக்களிலொருவரான ஜயனந்ததேவ னென்னும் நரேசன், விக்ரம வருடம் (63) கார்த்திகை சுத்ததேவஸ்தான ஏகாதசி நாள் ஜங்கமபுரமென்னும் கிராமத்தை ஸ்ரீ காசி (பனாரஸ்) விஸ்வரா ராத்திய பீட (ஜங்கமவாடிமட)த்தினுடைய கோவுகளின் பரிபாலனத்திற்காக எழுதிக்கொடுத்துள்ள தாம்பிர சாசனமானது இன்றைக்குச் சுமார் 1355 வருடங்களாகின்றன. மற்றுமிப்படியே ஹிந்து மஹாராஜர்களுடைய தான சாசனங்களனேகமாயிருப்பதுமல்லாமல்மற்றுப பாபர், அக்பர், ஜஹாங்கீர், உமாயூன் முதலான மொகலாய சக்கிரவர்த்திகளின் தானசாசனங்கள், 20 வரையில், தற்போதும் மடத்திலிருந்து வருகிறது. ஹிந்து தர்மத்தின் பரம வைரியான ஔரங்கஜேப் என்பவன் இக்காசி பீடத்தை நாசம் செய்யும் உத்தேசத்துடன் படையெடுத்து வந்தபோது இக்காசி பீடாதிபதியான ஸ்ரீ, ஜகத் குரு மல்லிகார்ஜ்ஜுன சுவாமிகளென்பவர் விசேஷமஹிமைகளைக் காட்டியதால் ஔரங்கஜேபினுடைய கர்வமடங்கி பிராயச்சித்தம் செய்துக்கொண்டு அரபி பாஷையில் ஒரு தானசாசனமெழுதிக்கொடுத்திருக்கிறான். மற்று மிக்காசி பீடத்தின் கிளைமடமானது நேபாள ராஜ்யத்தில் பாககாம் என்னும் கிராமத்திலிருந்து வருகிறது. இச்ஜங்கமவாடி மடத்திற்கு நேபாள மஹாராஜனுக பூருவத்திலிருந்த விஸ்வமல்ல நிருபதியானவன் தன் பத்தினி, கங்காதேவியுடனும் தனது குமாரர்களான திரிலோ

கமல்லன், திரிபுவனமல்ல னென்னுமிரு புத்திரர்களுடனும் கூடி விக்ரம, வருடம் (692) கிறிஸ்து சகாப்தம் 639-வது ஜேஷ்டசுத்த அஷ்டமியில் தேவநாகர பாஷையில் சிலஜமீன் (பூமி) களை இம் மடத்தின் பரிபாலனத்திற்காகக் கொடுத்து எழுதிக்கொடுத்த தாம்பிர சாசனமானது இன்றைக்குச் சுமார் 1296 வருடங்களாகின்றது. மற்றும், ஹிமோத்தேதார பீடமானது துவாபர யுகத்திலிருந்த தென்பதற்கு அநேக அத்தாக்ஷிகளிருக்கின்றன, இப்பீடத்திற்கு ஹிமாலய டிஹரி ராஜ்ய மஹாராஜர், உதயபுரம் ஜம்பு, காஷ்மீர் மஹாராஜா முதலான 11, அரசர்கள் சிஷ்யர்களாயிருந்து அநேக தான சாசனங்களும் வருஷகாணிக்கைகளும் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். மற்றுமிப் பீடத்தின் கௌரவத்தைக்கண்டு பொறாமைகொண்ட சில ஸ்மார்த்தர்கள் இப்பீடத்தைத் தங்கள் சுவாதீனம் செய்துக்கொள்ளவேண்டுமென்னும் துராலோசனையினலிப்பீடமானது வீரசைவர்களதல்லவென்றும் சங்கராசாரியரால் ஸ்தாபிக்கப்பட்டதெனவும் கோர்ட்டில் வழக்குத் தொடுத்துவெகு காலமாக வழக்கு நடைபெற்று கடைசியாக அலகாபாத் கோர்ட்டில் இப்பீட (சிம்ஹாசன) மானது சங்கராசாரியருக்கு முன்னால் எவ்வளவோ காலமாக புராதீனமாயிருந்திருக்கிறதென்றும் இது ஜங்கமர்களுக்குச் சேர்ந்ததெனவும் தீர்மானமாயிருக்கிறது.

மற்றுமிப் பஞ்ச மூலாசார்யர்களிலொருவரான ஸ்ரீ ரேவண சித்த சிவாசார்யர் ஆதிசங்கராசார்யருக்கு சந்திரமௌலீஸ்வர லிங்கத்தையனுக்கிரகித்திருக்கிறார், இப்பெட்டக லிங்கமானது சிருங்கேரி ஆதி சங்கராசார்யருடைய பரம்பரை பீடாதிகாரிகளால் தற்காலமும் நித்திய பூஜை நடைபெற்று வருகின்றது. மற்றும் பூர்வ காலத்தில் லங்காதிபதியாயிருந்த விபீஷணனுடைய பிரார்த்தனனுசாரமாக லங்காபட்டணத்திற்கு விஜயம்செய்து மூன்று கோடி குரு ரூபத்தைத் தரித்து மூன்று கோடி சிவலிங்கப் பிரதிஷ்டை ஒரு முகூர்த்தத்தில் செய்து முடித்தார். மற்று மிச்சிவாசார்யருக்கு உஜ்ஜயனி பட்டணத்து பிஜ்ஜளராஜன் முதலான அரசர்களும் சிஷ்யர்களாயிருந்து அநேக தானசாசனங்களும் காணிக்கைகளும் கொடுத்திருக்கிறார்கள்.

மற்றும் பூர்வத்தில் காஞ்சீ நகரத்திற் கதிபனாயிருந்த சோள பூபாலனென்றமரசன் காஞ்சீ நகரத்துள் விஷ்ணுவை ஸ்தாபிக்க வேண்டுமென்பதாக ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோவிலை ஏராளமான பொருட்செலவினால் கட்டி முடித்து விக்கிரஹ பிரதிஷ்டை செய்யவும் அது சிவனுக்கெதிராக நிலை பெறாமலிருந்தபடியால் அவ்வரசன் அநேகர்களைக்கொண்டு அஷ்டபந்தனங்கள் செய்துப்பார்த்தும் நிலைபெறாமல் அவ்விக்கிரஹம் சலித்து (அசைந்து)க்கொண்டி

ருப்பது கண்டு அரசன் மிகதுக்காக்கிராந்தனுகி ஸ்ரீ ரேவண சித்த சிவாசார்யரையணுகி அவரிடம் பிரார்த்திக்கவும். இச்சிவாசார்யர் அவ்விடம்போய் அவ்வரதராஜ விக்கிரகத்தின் மஸ்தகத்தைத் தம் ஹஸ்தங்களால் பிடித்து நிருத்தவும் அதுஸ்திரமாக நிலைபெற்றது, பிறகு ஸ்ரீ ஏகாம்பரநாதர்சன்னிதியின் முன்பாகபூமியைப்பர்சித்து பூகர்ப் பத்திலிருந்து ஜனித்த ஸ்ரீருத்திரமுனீஸ்வரசிவாசார்யரை தமதுபீடத்திற்கழைத்துப்போய்தாம அவருக்குப்பட்டாபிஷேகம் செய்வித்து தம்முடைய உத்திராதிகாரத்தையவருக்கீந்து தாமுற் பவித்த ஸ்ரீகொல்லிபாகி சோமநாதலிங்கத்திலந்தர்த்தானமானுர். இவ்விஷயங்கள் அநேக கிரந்தங்களிலும் உருவச்சிலைகளாலும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன.

இப்படியாக இப்பரதகண்டத்து மஹாராஜர் முதலாக அநேக அரசர்களும் கூட குருவுக்குத் தனுவை(சரீரத்தை)யும் லிங்கத்திற்கு மனதையும், ஜங்கமத்திற்கு தனத்தையும் அற்பிக்கவேண்டுமென் னும் கிரந்தவசனத்தைப்போலவே அனேகவிதங்களான தானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள்கொடுத்த ஜமீன் (பூமி) கள்நாளது வரைக்குமிவர்கள் சுவாதீனத்திலேயேயிருந்து வருகிறது. இவ்விஷ யத்திலிப்படிப்பட்ட குரு மடங்களே சாக்ஷிகளாயிருக்கின்றன, இங்கிப்படியிருக்க ஜங்கமஸ்வரூபத்தையறியாத வேடதாரிகளான சன்னியாசிகளிற் சிலர் தாங்களே ஜங்கமர்களெனவும் சொல்லிக் கொண்டு ஜனங்களை ஏமாற்றிக்கொண்டு வருவதைப் பார்த்தால் சூரியனைவிட்டு ஜக (பிரபஞ்ச)த்தின் இருளைப்போக்குவேனென ஜம்பமாகத்திரியும் மின்மினிப்பூச்சிகளைப்போலிவர்கள் இவ்வுலகில் கேலிக்காரர்களாகிறார்களேயொழிய வேறில்லை. மற்றும் வீரசைவ மதகிரந்தத்தில்.

*சரமூர்த்திம் விநாதேவி அன்யோனைவஹி ஜங்கம:*
*சரமூர்த்தி யபிதானேன ஜங்கம: கதிதாத்ருவம்*
*அன்யதாயச்ச ஜானுதி ரௌரவம் நரகம் பிரசேத்*

எனச் சொல்லப்பட்டிருக்கின்றன, ஓ, பார்வதியே சரமூர்த் தியே ஜங்கமனுயிருக்கிறான், வேறொருவ றென்றைக்குமாவதில்லை, இச்சரமூர்த்தியை அன்னியனெனப்பாவித்தால் ரௌரவ நரகத் தை யடைவானென உபதேசித்திருக்கிறார், இம்மாதிரியான தர்ம கிரந்தத்தின் உபதேசத்தை யறியாத மூட சன்யாசிகளானவர் கள் இனியாவதும் தம்முடைய வக்கிரமார்க்கத்தைவிட்டு ஜகதா சார்யர்களிடத்தில் ஒருவருமடையக்கூடாத பக்தியைவைத்து கைவல்லிய சுகத்தை யடையவேண்டுமெனக்கோருகிறோம்.

12-6-33 பஞ்சாசார்ய பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

ஸ்ரீ வீரபத்திரகுருவே நம:

## சிவ சர்வோத்தமத்வம்

யதாதமஸ்தன்ன திவாந ராத்ரிர்ன சன்ன சாசச்சிவ ஏககேவலம்
ஏக ஏவருத்ரா நத்விதீயாய தஸ்தே,,
உமா சஹாயம் பரமேஸ்வரம் பிரபும்,,

இத்தியாதி யனேகவேதவேதோபநிஷத்துவாக்கியங்களில்சிவனே அநாதி மூர்த்தி என்றும், அவனே பரப்பிரஹ்ம மென்றும், சக்தி விசிஷ்டனென்றும், தீர்க்க தொனியுடன் சொல்லுகின்றன. சக்தி விசிஷ்டனான அப்பரசிவமூர்த்தியினாலேயே சரா சராத்மகவாதீ ஜகத்து நிர்மிதமாயிருக்கிறதென்று, ஸ்ரீ காலக்ஞானிகளான அநேக மஹரிஷிகள் தங்கள் தங்கள் கிரந்தங்களில் பிரதிபாதித்திருக்கிறார்கள். விஷ்ணு, பிரஹ்மன், இநதிரன், குபேரன் முதலான தேவதைகள் அப்பர மாத்மனின் உபாசனையினாலேயே தமக்குப் பிராப்தமாயுள்ள அமூல்யஸ்தானங்களையலங்கரித்தார்களென்று வியாசமஹரிஷிதான் எழுதினஸ்காந்தாதிபுராணங்ணகளில் எழுதியிருக்கிறார், சமஸ்ததேவதைகளுக்கும்கூட சிவனே உபாசனமூர்த்தியாயிருப்பதால் அச்சிவனுக்கு மஹாதேவ னென்னும் நாமம் அன்வர்த்தமாகி பிராப்தமாயிருக்கிறது. பூர்வகாலத்தில் பாரதகண்டத்தில் இருந்த சமஸ்தயோகிகளும் சக்கிரவர்த்திகளும், மானவர்கள் முதலான அனேகர்கள் சிவனே சர்வோத்தமனென்று நம்பி அவரின் சுரூபமான சிவலிங்கமூர்த்திகளைப் பிரதியொரு ஸ்தானங்களிலும் ஸ்தாபித்து, அவரின் உபாசனையை நிஸ்சிமபக்தியினால் செய்து கைவல்லியசுகத்தையநுபவித்தார்கள், புராதன மஹரிஷிகள் சிவலிங்கமூர்த்திகளை ஸ்தாபித்து பூஜித்த மாதிரி மற்றெந்தமூர்த்திகளையாவது ஸ்தாபிக்கவில்லை. அப்படி பூஜிக்கவுமில்லை.

உலக விக்யாதரான வியாசமஹரிஷி தான் ஆதியில் விஷ்ணு பக்தனாகி விஷ்ணுவேதேவோத்தம னென்று சொல்லிக்கொண்டு காசி க்ஷேத்திரத்திற்குப் போய் விஸ்வநாதர் தேவாலயத்திலுங்கூட. "நதேவ, கேசவாத்பர:, என்று விஷ்ணுவின் ஆதிக்யத்தைப் பாடவும், நந்தீஸ்வரனால் ஹஸ்தஸ்தம்பனமடைந்து அசாதாரணமான (ஒருவருமடையக்கூடாத) துக்கத்திற்கிடாகி தன் உபாசன தேவதையான விஷ்ணுவினாலேயே சிவசர்வோத்தமத்தைத் தெரிந்துக்கொண்டு சிவனைத்தியானித்து பந்தனத்திலிருந்து விடுதலையடைந்து கங்காநதி தீரத்தில் தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து சிவனால் தனக்குப் பிராப்தமான தோஷத்தினால், முக்தனான விஷயத்தைத்தானே காசிகாண்டத்தில் ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறார். இந்தலிங்கம் வியாசேஸ்வர னென்னும் பெயரி

ணல் தற்போதும் வியாச காசியில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, இதல்லாமல் அஷ்டசித்திகளையு மடைந்து மஹாமஹிமை சாலியென ஜகத்பிரசித்தனன அகஸ்திய மஹரிஷியுங்கூடதன் பெயரால் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து அச்சிவலிங்க உபாசனையினல் சப்தசமுத்திரபான முதலான அற்புத காரியங்களைச் செய்து உலகமானியனன அம்மஹரிஷியினல் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் அகஸ்த்யேஸ்வர னென்னும பெயரால் இப்போதும் காசி க்ஷேத்திரத்திலிருக்கிறது, இம்மாதிரியாகவே கௌதமர், கஸ்யபர், கபிலர், மார்க்கண்டேயர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலான மஹரிஷிகளுங்கூட தங்கள் பெயர்களினல் சிவலிங்கங்களை ஸ்தாபித்து நித்தியசுகங்களை யநுபவித்தார்கள், இந்தலிங்கங்கள் கௌதமேஸ்வரர், கஸ்யமேஸ்வரர், கபிலேஸ்வரர், மார்கண்டேஸ்வரர், வசிஷ்டேஸ்வரர், விஸ்வாமித்ரேஸ்வர், முதலான பவித்ராபிதானங்களினல் தற்போதும் காசிக்ஷேத்திரத்தில், பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, ஈதல்லாமல், விஷ்ணுவும் கூட தான எடுத்த தசாவதாரங்களிலும், ஒவ்வொரு சிவலிங்கத்தை ஸ்தாபித்துப் பூஜித்துத் தன் இஷ்டார்த்தத்தை யடைந்தா னென்று அநேகாநேக புராணங்களில் எழுதப்பட்டிருக்கிறது, ராமாவதாரத்தில் ஸ்தாபித்த ராமேஸ்வர லிங்கத்தின் விஷயம் சர்வருக்கும் தெரிந்ததேயாயிற்று மச்சாவதாரத்தில் மச்சேஸ்வர னென்னு மொரு லிங்கத்தை ஸ்தாபித்தான், இந்த லிங்கம் லங்காபட்டணத்தில், சோபித்துக் கொண்டிருக்கிறது. கூர்மா வதாரத்தில் கூர்மேஸ்வரனென்னு மொரு லிங்கத்தை ஸ்தாபித்தான், மற்றும் இவைகளல்லாமல் ஒரு சமயத்தில் சிவனின் பாதகமலங்களை சஹஸ்ர கமல (புஷ்ப) ங்களினல் பூஜித்துக் கொண்டிருக்கும் போது ஓர் நாள் சிவனின் மாயையினல் ஒரு கமலம் (தாமறைபூ) குறைய அப்பொழுது விஷ்ணுதான் கைக்கொண்ட பூஜாகாரியம்சம்பூர்ணமாகவில்லைஎன்று நினைத்துத்தன் நேத்திரகமலத்தை தாமறைப் புஷ்பத்திற்குப் பதிலாக சமர்ப்பித்துப் பூஜையைமுடித்தான் ஆனதால் சிவன் பிரசன்னமாகி சுதர்சனசக்கிர மளித்து மறைந்தான், என்னும் விஷயம் புராணாதிகளில்சுப்ரசித்தமாயிருக்கிறது இதைப்போலவே பிரஹ்மன், இந்திரன், சந்திரன் முதலான தேவதைகளுங்கூடசிவனைப் பூஜித்தும் தரித்தும், அசாதாரண (ஒருவருமடைய முடியாத) சுகத்தையடைந்தார்கள். இத்தேவர்கள் சிவலிங்கத்தைப் பூஜித்தல்லாமல் சதா (எப்பொழுதும்) சிவனுடைய சம்மந்தம் தங்கள் சரீரத்திலிருக்க வேண்டு மென்றுப் பாவித்து, அச்சிவலிங்கமூர்த்தியைச் சரீரத்தில், தாரணம் செய்து கொண்டிருந்தார்க ளென்று தாமசாஸ்திரங்கள் சொல்லுகின்றன, இவ்விஷயத்தில்.

விஷ்ணு பிரம்மாதயோதேவாமுனயோ கௌதமாதய :
தாரயந்தி சதாலிங்க முத்தமாங்கே விசேஷத:

இத்யாதி சுலோகங்களே பலமான பிரமாணங்களாயிருக்கின்றன, இச்சுலோக அபிப்ராயத்தை யோசிக்கில், இது நிஜமென்றே காணுகிறது, இவ்விஷயத்தில் ஜகத் பிரசித்தனை பண்டரீபுரத்தின் விடோபாநாமகமான விஷ்ணு மூர்த்தியின் மஸ்தகத்திலும், பார்சி பட்டணத்திலுள்ள பகவந்தநாமகமான விஷ்ணுமூர்த்தியின், மஸ்தகத்திலும், மற்றும், திருவாங்கூர் (திருவனந்தபுரம்) சமஸ்தானத்திற்கு முக்கிய ராஜதானியான அநந்தசயனம் பட்டணத்திலுள்ளதும் அம்மஹாராஜரின் குலதேவதையான அநந்த பத்மநாபர் என்றும் விஷ்ணுமூர்த்தியின் ஹஸ்தத்திலிருக்கும் சிவலிங்கதாரணமே பலமானசாக்ஷியாயிருக்கிறது,

சுலோகம்

அநந்தபத்மநாபஸ்ய ஹஸ்தகே லிங்கஸ்யதாரணம்
பாண்டுரங்கே ததாவிஷ்ணோ: சீர்ஷே லிங்கஸ்ய தாரணம்

சிவாஜி மஹாராஜனின், குருவான துக்காராம் சுவாமிகள் தங்கள் கீதாகிரந்தத்தில், 'விடோபாச்யாமஸ்தகே லிங்கதாரணம், என்றுச் சொல்லி யிருக்கிறார், பண்டரீபுரம் விடாபா மூர்த்தியும், பார்சி பட்டணம் பகவந்த மூர்த்தியும் மைசூர் ராஜதானியில் கொள்ளேகாலத்திற்குச் சமீபமாக அடவியில் வேங்கைப் புலி வாகனத்தின் மீதமர்ந்துள்ளதும், மிகபிரபலமானதும் அதிசக்தி வாய்ததுமான, மாதேசப்பன், என்னும் மூர்த்திக்கு கழுத்தில் சிவலிங்கதாரண மிருப்பதா லம்மூர்த்தியும் வீரசைவ மூர்த்தி யெனத் தெரிய வருகிறது. இம்மூர்த்திகள் வெகு புராதன காலத்தில் ஸ்தாபிதமான வைகளாயிருக்கின்றன, இவைகளைப் போலவே பூர்வகாலங்களில் ஸ்தாபிதமான எல்லாத் தேவதைகளின் மஸ்தகத்தில் சிவலிங்கதாரணமுள்ள விஷயம், சோண்டூர் குமாரசுவாமி, துளஜாபுரம் பவானி, குட்டாபுரம் தானம்ம, முதலான தேவதைகளினால் வியக்தமாகிறது, இவ்வெல்லா விஷங்களையும் பரியாலோசனை செய்துப் பார்க்கில் சிவனே சர்வோத்தமனென்றும், அச்சிவ பூஜாதாரணாதிகளினாலேயே சகல சித்திகளும் கிடைக்கு மென்றும், ஸ்பஷ்டமாகிறது, பூர்வகாலத்தில் திராவிடதேசத்தில், சிவபக்தர்களான வீரசைவர்கள் விசேஷமாக வாசம் செய்து கொண்டிருந்தார்களென்றும் ராமநுஜா சார்யரின் பிரபல்யத்தினால் வீரசைவரின் ஜனசங்கை குறைந்து வந்து கடைசியில் க்ஷீணவஸ்த்தைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது, ராமாநுஜாசார்யர் ராஜரின் சஹாய விசேஷத்தாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ அத்யந்த பிரசித்தங்களான சில சிவ

சம்மந்தமான தேவாலயங்களைத் தம் சுவாதீனமாக்கிக்கொண்டு அத்தேவாலயங்களில் விஷ்ணுவிக்கிரங்களை ஸ்தாபித்தா ரென்றும் இன்னும் சில சைவ விக்கிரகங்களையே விஷ்ணுவிக்கிரகங்களாகச் செய்தாரென்றும் கிரந்தாதாரங்களினாலும் இன்னும் பிரத்யக்ஷா நுபவங்களினாலும் தெரியவருக்கிறது, இவ்விஷயத்தில் திருப்பதியி லிருக்கும் வெங்கடரமண தேவாலயமே பலமான சாக்ஷியாயிருக் கிறது, வெங்கடரமண விக்ரஹம் விஷ்ணு விக்கிரக மல்லவென் றும் அவ்விக்கிரஹம் வீரபத்திர சுவாமியின் விக்கிரஹமென்றும் வீரபத்திர சுவாமி விக்கிரஹத்தையே ராமாநுஜாசார்யர் விஷ்ணு விக்கிரகமாகச் செய்தாரென்றும் ஸ்ரீபதிபண்டிதர் தாம் எழுதின, ஸ்ரீகரபஸ்யத்தில்ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறார், அதாவது,

> நநுவெங்கடேஸ்வர விடலேஸ் வரஸ்தானே
> விஷ்ணோர்ஸ்வர சப்த சிராவணாத் பரசுரா மவதாரே
> தஸ்ய பிராஹ்மண குலசம்பவ ஸ்ரவணாத்
> கதம் க்ஷத்ரியத்வ முபதிஸ்யதே இதி சின்ன
> வெங்டேஸ்வரஸ்யா பாச விஸ்ணுத்வம்
> ததங்கே நாகபூ ஷணைதி தர்மாணுபத்யோதனாத்
> மூலவிக்ரஹே சங்கசக்ராதி லாண்டனா நாமதர்சனாத்
> வீரேஸ்வரஸ்ய ராமாநுஜகல்பித வெங்கடேஸ்வரத்வம்
> ரஜ்ஜௌ சர்ப்பவதா பாச மாத்ரமேவ

இப்பாஷ்ய சுலோகத்தை விசாரிக்கில் திருப்பதி க்ஷேத்திரத்திலுள்ள மூர்த்தி வீரபத்திர மூர்த்தி என்றும் அம்மூர்த்திக்கு விஷ்ணுவின் முக்கிய அடையாளங்களான சங்குசக்ராதிகளிருப்பதில்லை என்றும், அம்மூர்த்தி சர்ப்பாபரண பூஷிதமாக யிருப்பதென்றும் காணப்படுகிறது, இப்பாஷ்யக்காரரின் வார்த்தைகள் நிஜமா, பொய்யவென்று விசாரிப்பது சர்வரின் முதலாவது கர்த்தவ்வியமாயிருக்கிறது, திருப்பதிக்ஷேத்திரத்தைப் பார்த்து வந்த அநேக ஜனங்களை விசாரித்ததில் அவ்விடமுள்ள வெங்கிடரமண சுவாமிக்குக் கழுத்தில் சர்ப்பம் சுற்றிக்கொண்டிருப்பது நிஜமென்றும். கையில் கல்லினாலாக்கப்பட்ட சங்குசக்ராதிகளில்லாமல் உலோகத்தினால் தயாரித்த சங்குசக்கரங்களை வைத்திருக்கிறார்களென்றும். இன்னும் பிரதிதிங்கட்கிழமைகளிலும், மார்கழி மாதம் 30-நாளும், வில்வார்ச்சனை நடப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆனதினால் ஸ்ரீபதிபண்டிதர் பிரத்யக்ஷமாக அவ்விக்கிரஹத்தை தின் எல்லாசுரூபங்களையும் தெரிந்துக்கொண்டே தம் பாஷ்யத்தில் யதார்த்த விஷயத்தை எழுதியிருக்கிறாரென்றுஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது,உலகத்திலனந்தவிஷ்ணுமூர்த்திகளிருக்கின்றன, எங்க விஷ்ணுமூர்த்திபிடத்திலாவது, சர்ப்பாபரண பூஷிதரும் சக்குச்க்கரமில்லாமையும் காணப்படுவதில்லை, ஆனால் வெங்கடரமணனுக்கு

சர்ப்பாபரணமிருப்பதினாலும் சங்குசக்கிரங்களில்லாமலிருப்பதினா லும், அம்மூர்த்தி வீரபத்திரமூர்த்தி என்றே சொல்லவேண்டியதா கிறது, இந்த வெங்கடரமணமூர்த்தியை இப்பொழுதும் சில லிங்க தாரிகள் வீட்டுத்தெய்வமென பக்தியுடன் நடந்துக்கொள்ளுகிறார் கள், வீரசைவர்கள் விஷ்ணுமூர்த்தியை வீட்டுத்தெய்வமாக என் றைக்கும், எடுத்துக்கொள்வதில்லை, அம்மூர்த்தி பூர்வகாலத்தில், வீர பத்திரமூர்த்தியாயிருந்ததினாலும் அம்மூர்த்தியே சிலருக்கு வீட் டுத்தெய்வமாயிருந்ததினாலும், வீரபத்திரதேவ னென்னும் நாமம் நஷ்ட(லோப) மாகி வெங்கடரமண னென்னும் நூதனப் பெயரு ண்டாகி விஷ்ணு அடையாளங்களினால் யுக்தமானாலுங்கூட அம் மூர்த்தியிடத்துத் தாங்கள் வைத்தபக்தியைவிடாது தற்போதைய வரைக்கும், நடந்துக் கொண்டு வந்திருக்கிறார்களென்று ஸ்பஷ்ட மாகிறது இதேமாதிரியாக ராமானுஜாசார்யரின் காலத்தில்ஜனங்கள் அபிப்ராயப்படும் படியான அநேகானேக வித்யாசங்களா யிருக்க வேண்டுமென்று யூகிக்கவேண்டியதாயிருக்கிறது, பூர்வத்தில் திரா விடதேசம் வீரசைவ (லிங்காயுத)ருக்குத் தாய் வீடாக இருந்தது, இத்தேசத்தில், அநேகானேக பண்டிதர்கள் ஜனித்து வீரசைவ (லிங்கயுத) மதவிஷயத்தில் அனந்தாநந்த கிரந்தங்களை யுண்டாக்கி யிருக்கிறார்கள், இப்படி வீரசைவ மயமாயிருந்த திராவிட தேசத் திலிப்போது எங்கேயோ ஒவ்வொரு வீரசைவர் வாசமாயிருப்ப தைப்பார்த்தால், அதிவியசனமாகிறது, பரதகண்டத்தில் சர்வோ த்கிருஷ்டமாக வியாபித்திருந்த வீரசைவ (லிங்காயுத) மதம் சிற் சில அரசர்களின் காலத்திலுமிப்படியே அபவாதமாகி (நஷ்டமாகி) க்ஷீணதசையடைந்து வந்திருக்கிறது, பரமாத்மன் இம்மதத்திற்குப் பூர்வகாலத்தைப்போல சமஸ்த வைபவத்தைக் கொடுத்து, இம் மதத்தை சர்வோத் கிருஷ்டமாகப் பிரகாசப்படுத்துமாறு அநுக் கிரகிக்கவேண்டுமென இச்ஜெகன் நியாமகனைப் பிரார்த்திக்கிறோம்.

(10-12-28. மைசூர், பஞ்சாசார்ய பிரபா பத்திரிகை)

# பஸ்ம (விபூதி) தாரணம்.

விபூதிர்ப் பசிதம் பஸ்ம க்ஷாரம் ரக்ஷேதி பஸ்மந:
ஏதானி பஞ்ச நாமானி ஹேதுபி: பஞ்சபிர் புருசம்

என்னும் வீரசைவ சித்தாந்தத்தின்படிக்கு பரமபவித்ரமான பஸ்மமானது, விபூதியென்றும், பசிதமென்றும், பஸ்மமென்றும், க்ஷாரமென்றும், ரக்ஷையென்றும், ஐந்துநாமங்களை யடைந்திருக்கிறது, இவ்வைந்துநாமங்களும் அப்பஸ்மத்திலுள்ள ஒவ்வொருமஹத்வ குணங்களினால் வந்தவைகளாகும், 'விபூதிர்ப்பூதிஹேதுத்வாத்' அஷ்டைஸ்வர்யங்களுக்குக் காரண பூதமானதினால் விபூதி என்றும், "பசிதம் தத்வபாசனாத்," பரசிவ தத்துவத்தைப்பிரகாசப் படுத்துவதால் பசிதமென்றும், 'பாபாநாம் பர்ச்சனாத் பஸ்ம" காயகம், வாசகம் மானசங்களான பாவங்களை எல்லாம் ஓட்டுவதால் பஸ்மமென்றும், "க்ஷரணாத் க்ஷாரமாபதாம்" அத்யாத்மிகாதி விபத்துகளைப்போக்குவதினால் க்ஷாரமென்றும், 'ரக்ஷணாத்சர்வபூதேப்யோ ரக்ஷேதிபரிகீயதே" பூதப்பிரேதப் பிசாசாதிகளினாலுண்டாகும் பயத்தை நீக்கி காப்பாற்றுவதால், ரக்ஷையென்றும், இவ்வோரே விபூதியானது ஒவ்வொரு தர்மங்களினாலிம்மாதிரி ஐந்து பெயர்களையடைந்திருக்கிறதென்று ஸ்ரீரேணுகபகவத்பாதர் அகஸ்திய மஹரிஷிக்கு விபூதியின் மஹத்வத்தை விஸ்தாரமாகப் போதித்திருக்கிறார், ஆகையாலனைவரும் பக்திபூர்வகமாக

பிராதக்காலேச மத்யான்ஹே சாயாஹ்னே சத்ரிபுண்ட்ரகம்
கதாசித் பஸ்மனா குர்யாத்ச ருத்ரோநாத்ர சம்சய :

என்னும் பிரமாணத்திற் கநுகுணமாக பிராதக் காலையிலும் மத்தியான காலத்திலும் சாயங்காலத்திலும், தங்கள் தங்கள் நெற்றியில் விபூதி அணிபவர்கள் சாக்ஷாத் ருத்ரஸ்வரூபிகளாகிறார்கள், இதிலெவ்வித சம்சயமுமில்லை, எனப்போதித்த ஆசார்யர்கள் பஸ்மதாரணத்தில் தங்கள் சஹஜ பிரேமையை எம்மட்டில் சொல்லியிருக்கிறார்களென்பதையாவது கண் திறந்துப்பார்த்து பஸ்மத்தின்விஷயத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்து, ஆசார்யபகவத்பாதருடைய பக்தரென்னும் நாமத்தையடைந்து தாங்களும் வீரசைவ (லிங்காயுத) ர்களென்பதை ஸ்தாபித்துக் கொள்வதே பிரதியொருலிங்காங்கியின் பிரதம (முதலாவது) தர்மமாயிருக்கிறது, ஒன்றே ஒன்றான பிராணவாய்வானது ஹிருதயாதி ஸ்தானங்களிலிருந்துக் கொண்டு

வேறுவேறு காரியங்கள் செய்வதால் பிராணனென்றும், அபான னென்றும்,வியானனென்றும், சமானனென்றும், உதானனென்றும் பஞ்சநாமங்களை யெப்படியடைந்திருக்கின்கிறதோ அதைப்போல வே சுருதி யுக்தமான பஸ்மம் ஈஸ்வரனின் சத்யோ ஜாதாதி பஞ்ச முகங்களினால் பிறந்த, நந்தை, பத்ரை, முதலான பஞ்சகோவு (பசுக்)களின் உபாதியினு வொவ்வொரு மஹத்வத்தை உட்கொ ண்டு விபூதி, பசிதம், பஸ்மம், முதலான பஞ்ச நாமங்களையடைந் தது, ஆனால் சத்யோஜாத முகத்தினால், விபூதியும், வாமதேவ முக த்தினால் பசிதமும், அகோர முகத்தினால் பஸ்மமும், தத்புருஷ முகத்தினால், க்ஷாரமும், ஈசான முகத்தினால் ரக்ஷையும், உற்பன் னமாயிற்று, காரணத்திலுள்ள குணம் காரியத்தில் வருமென்னும், நியமமிருப்பதால் ஈஸ்வரனின் அந்தந்த முகத்திலுள்ள அஷ்ட் டைஸ்வர்யாதிகள் அந்தந்த முகத்திலவதரித்துள்ள விபூதிபசிதாதி களினாலேயும் உண்டாகிறது. இப்படிகாரணத்திலில்லாமல் காரிய பூதங்களான இவ்விபூதியாதிகளினால் அஷ்டைஸ்வர்யாதிதர்மங்கள் எண்மைக்கும் கிடைக்கமாட்டாது. இவைபரமேஸ்வரனின் பஞ்ச முகங்களிலுற்பன்னமானதினாலும், தர்மபேதத்தாலும், பஞ்ச நாமங்களையடைந்து சிவபக்தரின் உத்தமாங்காதி ஸ்தானங்களை யாஸ்ரயித்து அப்பக்தரின் ஹிருதயத்தை யாஷ்ரயித்த ஜன்ம ஹேதுவான பவபீஜத்தை (பிறவி வித்தை) ச்சுட்டு சிவதத்துவப் பிரகாசத்தை யுண்டாக்கும், ஆனதாலிப்பஸ்மத்தின் மஹத்வத்தை எவ்வளவு கொண்டாடினாலும் முடியாததாயிருக்கிறது. இப்பஸ் மத்திலிப்படிப்பட்ட அவ்யாஜ மஹத்வ மிருப்பதினாலேயே

பிரஹ்மா விஷ்ணுஸ்ச ருத்ரஸ்ச தேவாஸ்சக்ர புரோகமா:
தாரயந்தி சதாபஸ்ம பாலதேசேது பக்தித:

விஷ்ணு பிரஹ்மேந்திரியாதி சகல தேவர்களுங்கூட பரமபவித்திர மான பஸ்ம திரி புண்ட்ரத்தை யிடைவிடாமல் தரித்து தங்கள் தங்கள் பதவிகளையடைந்தார்களென்று புராணாதிகள் சொல்லுகின் றன, ஆகையால் விபூதியை நித்யகாரியங்களிலும், பசிதத்தை நை மித்தியகாரியங்களிலும், க்ஷாரத்தை யிதர சர்வகாரியங்களிலும், பஸ்மத்தை பிராயச்சித்தகர்மங்களிலும், ரக்ஷையென்னும் பஸ்மத் தை முக்திகார்யங்களிலும் உபயோகிக்கத்தக்கதென்று ஸ்ரீரேணுக பகவத்பாதர் ஸ்பஷ்டமாகப் போதித்திருக்கிறார்.

## பஸ்ம (விபூதி) தாரணம்

இப்பஸ்ம ரசனாகிரமமா (விபூதிசெய்யும் முறைமையா) வன, கல்பம் அநுகல்பம், உபகல்பம், அகல்பமெனநான்கு விதமாயிருக்கும் அவையாவன, சாஸ்த்ர விதியை மீராமலும் கோமய கிரஹண முதலாக சிவாக்கினியினால் பஸ்மமாகும் வரையில் மந்திர தந்திர லோபங்களில்லாமல் செய்வதே கல்பமென்றும், ஈதொரு நியமமுமில்லாமல் காட்டில் கிடக்கும் சாணங்களை அக்கினியால் சுட்டதே அநுகல்பமென்றும், இன்னும் கடையில் விற்கும் விபூதியை எடுத்து கோமூத்திரத்தால் பிசைந்து உருண்டைசெய்து, விதிப்பூர்வமாக நெருப்பில் சுட்டது உபகல்பமெனவும், மந்திர தந்திரங்களெதுவும் தெரியாதவர்களால் தயாரிக்கபட்டது அகல்பமெனப்படும். இந்நான்கு விதமான விபூதிகளில் முதலாவதான கல்பவிபூதியையே சங்கிரஹித்து தங்கள் அஷ்டா வர்ணங்களை நிர்வஹிக்கத்தக்கது. இக்கல்ப விபூதிதாரண மில்லாமல் அஷ்டா வர்ணக்கிரியைகள் என்றைக்கும் சம்பூர்ணமாகமாட்டாது. மானவர்கள் ஆசார்ய பகவத்பாதர் சொன்ன வைதீக அஷ்டாவர்ண கிரியாநிஷ்டனாகவேண்டுமானால் கல்பவிபூதியை அவஸ்யமாகத்தரிக்க வேண்டியது. ஈதல்லாமல் பஜாரில் விற்கும் விபூதியைக்கொண்டு வந்து அஷ்டாவரணங்களில் கலந்தால் அந்த அஸ்ரௌதபஸ்மசம்மந்தத்தினால் மிக்கபாதோதக பிரசாதாத் யஷ்டாவரணகிரியைகள் சஹிதம் அபவித்ரவ (அசுத்த)மாகுமே யல்லாமல் தான் நடத்தும் அஷ்டாவர்ணாசாரங்களெல்லாம் சாபலில் ஹோமம் செய்ததை போல வியர்த்தங்களாகும். ஆனதால் அஷ்டாவர்ண கிரியா நிஷ்டராக இருக்கவேண்டு மென்கிற ஆசார்ய பக்தர்கள் தங்கள் தங்களாலான வரையில் ஸ்ரீரேணுக பகவத்பாதராலுபதேசித்தபடியாக ஸ்ரௌத பஸ்மத்தைப் பரிக்ரஹித்து தங்கள் அஷ்டாவர்ணங்களை பூர்த்திசெய்து ஸ்ரீ குருகிருபைக்கு பாத்திரர்களாகித் தன்னியராக வேண்டியது,

(இ ஃது, பஞ்சாசார்யபிரபா பத்திரிகை, 17-6-29)

லக்ஷணயுக்த அனுகூல குணவதியான கன்னிகையை நிர்ண யித்தபிறகு வரனுடையபந்துக்கள் தம்சங்கைக்கு சமசங்கை(எண்ணிக்கை) யுள்ள மாஹேஸ்வரரையும் மாங்கல்ய ஸ்திரிகளையும் அழைத்துக்கொண்டு மங்கள வாத்ய சமேதராய்

(2) மந்திரம்

அனிருக்ஷ ராருஜ வஸ்ஸம்து பம்தாயே பிஸ்ஸகா
ஹோயம்தி நோவரேயம் சமர்ய மாசம் பகோஹ்ரேணி
நீயாத்ஸம் ஜாப்பத்யம் சுய மமஸ்து தேவா:

என்னும் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே சுபசகுணங்களைப் பார்த்துக்கொண்டு பெண்வீட்டிற்குப்போய் வரனுடைய பிதுரு பிரார்த்தனையின்படி பெண்வீட்டார் அங்காரசஹிதகன்னிகையை கிழக்குமுகமாக பீடத்தின்மேல் உட்காரவைத்து சந்தனம், புஷ்பம், குங்குமம், தாம்பூலம், பழம், முதலானவைகளைக் கொடுத்து வரன்வீட்டுஸ்த்ரீகள் ஸ்ரீ சாம்ப சதாசிவத்தைத்தியானித்து வடக்குமுகமாக உட்கார்ந்து

(3) மந்திரம்

ப்ரவரான்விதகோத்ரோத்பன்னாய ப்ரபௌத்ராய குலபௌத்ராய
புத்ராய நாம்னே வராயகோத்ராத்பன்னாம் ப்ரபவுத்ரீம் புத்ரீம்
நாம்னீம் கன்யாம் பார் யாத்வாய வ்ருணே மஹே.

என்றுசொல்லி எல்லோர்க்கும் சந்தன-புஷ்ப-குங்குமம் கொடுத்துப்பின் பெண்கொடுப்பவர் தன் பத்தினி பந்துக்கள் அனுமதியின்படிக்கு (வ்ருணேத்வம்) என்று இரண்டு தடவைச் சொல்ல (ப்ரதாஸ்வாமி) என்று எல்லோர்க்கும் கேட்கும்படிச்சொல்லிப் பின்பு வரன்வீட்டார் கன்னிகையை வஸ்த்ராதிகளாலலங்கரித்த பிறகு வது தந்தை கிழக்குமுகமாகஉட்கார்ந்து இடப்பக்கத்தில் தன் பத்தினியையும், கன்னிகையையும் உட்காரவைத்து

(5) வாக்தான மந்திரம்

கரிஷ்யமாண விவாஹாங்கபூத வாக்தான மஹம் கரிஷ்யே

என்று மாஹேஸ்வரரைப்பூஜித்து தன் ஸ்தலத்தில் வரன்தந்தையை உட்காரவைத்துத் தான் அவர்முன்னே வடக்குமுகமாக உட்கார்ந்து புஷ்பங்களால் பூஜிப்பது, அவர்பிரதியாகி கன்யாபிதுருவைப்பூஜிப்பது, பிறகு கன்யா பிதுரு (5) மஞ்சள் (5)பாக்கு எடுத்து

(6) மஞ்சள், பாக்கு, முடியும் மந்திரம்.

ப்ரவரான்வித நாம்னேவராய ப்ராவரான்வித நாம்னேம்
இமாம் கன்யாம் ஜ்யோதிர் விதா திஷ்டை சுமுஹூர்த்தே
வாசாசம் ப்ரதகே, அவ்யம்ச்யே பதிதேக்ஷீயே
தசதோஷ விவர்ஜ்ஜிதே இமாம் கன்யாம்
ப்ரதாஸ்வாமி பக்த மாஹேச சன்னிதௌ

என்று மஞ்சள்பாக்கை வரன் தந்தை வஸ்திரத்தின் நுனியில் முடிந்து அம்முடிச்சை விபூதி, சந்தன, புஷ்பங்களால் பூஜிப்பது பிறகு.

(6) வரன் தந்தை சொல்லும் மந்திரம்

கோத்ரோத்பன்ன வரவிஷயே பவம்தோ. நிச்சதா பவம்து

என்று சொல்லி தாத்ருவின் வஸ்திர நுனியில் (5) மஞ்சள் (5) பாக்குகளை முடிந்துப் பூஜிப்பது, பிறகு

(7) தாத்ருவு சொல்லும் மந்திரம்.

வாசாதத்தா மயாகன்யா புத்ரார்த்தம் ஸ்வீக்ருதாத்வயா
கன்யாவலோக நவிதௌ நிச்சதத்ஸ்வம் சுகீபவ

என்று கன்யாபிதுருவைக் குறித்துச்சொல்வது, அவரும் சேர்ந்து

(8) மந்திரம்

வாசாதத்தாத்வயா கன்யா புத்ரார்த்தம் ஸ்வீக்ருதாமயா
பராவலோக நவிதௌ நிச்சிதஸ்வாம் சுகீபவ

என்றுகன்யாபிதுருவைக்குறித்துச்சொல்வது பிறகுமாஹேஸ்வரர்

(9) மாஹேஸ்வரர் ஆசீர்வாத மந்திரம்

ஓம் ஸ்வஸ்தி சிவா ஆபஸ்ஸந்து சௌமனஸ்ய மஸ்து
அக்ஷதம் சாரிஷ்டம் சாஸ்து தீர்க்கமாயு: சாந்தி:
புஷ்பிஸ், துஷ்டிஸ், ஷாஸ்து. ஏதத்வசஸ், சத்தியமஸ்து

என்று எல்லா மாஹேஸ்வரரும் ஆசீர்வாதம் செய்தபின்பு புத்திரவதியரான மாங்கல்ய ஸ்திரீகள் ஆரதிஎடுத்தபிறகு (5) பேருக்கு சாக்ஷி வெற்றிலை பாக்குக் கொடுப்பது. பிறகு வரன் வது கோத்திரம் சொல்லி இன்னார்மகளை இன்னார்மகனுக்குக்கொடுத்த தென்றுச்சொல்ல வேண்டியது, பின்பு எல்லோர்க்கும் சர்க்கரை, தாம்பூலம் புஷ்பம், சந்தனம், கொடுப்பது. பின்பு அவ்வீட்டுப் பெண் மாப்பிள்ளைகளுக்கும், வந்தவரன் வீட்டார்க்கும் (5) பேர் மாங்கல்யஸ்திரீகளுக்குக் குறையாமலும் அமுது சொல்லி வந்து அப்பியங்க ஸ்நானம் செய்வித்து அமுதளிப்பது, பின்பு இவர் வீட்டிற்கு அவர்களொரு நாள் போஜனம் செய்விக்கவேண்டியது, பின்பு ஒரு சுபமுகூர்த்த நாள்பார்த்து நிச்சயதாம்பூலம் எடுத்து

கன்னிகைக்கு நகைபோடுவது, பின்பு ஜோதிஷஞான ஜங்கமனால் விவாஹ முகூர்த்தம் நிச்சயித்து விவாஹ பத்திரிகை எழுதவேண்டியது பிறகு விவாஹ முதல் நாள்

## (1) விவாஹ மண்டபம்

விவாஹ முதல்நாள் வதுவின் தந்தையும், வரன் தந்தையும், பிராதக்காலையி லெழுந்து நித்தியகர்மங்களை முடித்து பத்தினி சஹிதம் அப்யங்கன ஸ்நானம்செய்து மடிவஸ்திரமுடித்திகசியாகி விவாஹத்திற் கென்றேற்படுத்திய ஸ்தலத்தில்பூமியைமெழுகி கோலங்களிட்டு சுபாசனத்திலமர்ந்து தன்வலபக்கம் பத்தினியை உட்காரவைத்துக் கொண்டு விவாஹகாலத்தில் சகல குலகோத்திராதி பந்து ஜனங்கள் கூடி அவர்கள்சம்மதமான தேவபோஜனம் செய்யவேண்டி சர்வமுக்கியமான வீரமாஹேஸ்வரரை நினைத்து கல்யாணவீட்டில் ஒரு யோக்கியமான இடத்தில் விவாஹ மண்டபம் போடவேண்டியது.

## (2) தீக்ஷா, விவாஹ, அல்லது பட்டாபிஷேக, மண்டப மந்திரம்.

அதௌ குல கோத்தா பந்து ரித்யாதின் விசாரம் கிருத்துவா
வாத்கத்த கார்யாணி சமாதான மார்ஜ்ஜயாக்தல விருத்தோக்த
ரீத்வா தேவபோஜனாதி முக்கியகார்யாணி காரயித்வா தேவாலயெ
வாமதேவா சர்வ விருத்த ஜன சமேதிர்யதா பதிவததா விவாஹ
மண்டபத்தனம் வாஸ்ய மஸ்த கேதார ஹெத்வாவது
சர்வாலங்காரைர் விபூர்ஷய $\frac{\text{தீக்ஷா}}{\text{விவாஹ}}$ மண்டபம் பிரவேசய:

என்று இம்மந்திர படன பூர்வகமாக தீக்ஷா, அல்லது விவாஹ அல்லது பட்டாபிஷேக மண்டபம் சுத்தமான பூமியில் (9-7-5) இந்த முழங்களில் யாதாவதொரு லக்க அகலமும் அதே நீளமும் (8) முழஉயரமுள்ள நாற்சதுரமான மண்டபம்போட்டு அதில்(16) அல்லது (12)கம்பங்களுள்ள தாகவும் நாற்புரமும்வாசலும் இதின் நடுமத்தியில் பஞ்சகலச ஸ்தாபனத்திற்காக (12) அங்குலம் அல்லது ஒரு அடி அகல நீளமுள்ள சதுஷ்(நாற்) கோணமான மேடை போட்டு அதில் (4) கம்பங்களுள்ள சின்னமண்டபம் ஒன்றுபோட்டு மண்டபத்தையும் அதன்கீழாகவும் கோமயம்சாணத்தால்மெழுகி

## (3) மண்டபக் கோலம்.

மண்டப மத்தியில் நவ (ஒன்பது) கோணக்கோலமிட்டு அதில் நான்கு மூலைக்கோணங்களும் விட்டு விட்டு மீதியுள்ள (5) கோணங்களுக்கும் (1) பவளநிறம், (2) தூயவெள்ளைநிறம், (3) பச்சை நிறம், (4) மஞ்சள்நிறம், (5) ஊதாநிறம், உள்ள மாவுகளினால் ஒவ்வொரு கோணத்திற்கும் ஒவ்வொருவர்ண மாவுகளினால் பஞ்சவர்ணக்கோலமிட்டு பஞ்சாக்ஷரம் இட்டு (5) கோணங்களுக்கும் மத்தி

யில் அஷ்ட (எண்) கோணக் கோலம், பஞ்சவர்ண மாவினால் வைத்து (கோலமிட்டு) மண்டபத்தின் சுற்றிலும் கரும்பு வாழை முதலான ஸ்தம்பங்கள் கட்டி, தேங்காய் பாக்குக் காய்குலை வாழைக்காய், வாழைப்பழம், முதலானவைகளும் தென்னையிலை, மாவிலை இன்னும் பாலுள்ள மரங்களின் இலைகளால், தோரணங்கள் கட்டி புஷ்பமாலை, தர்ப்பைமாலை, படங்கள், கண்ணாடிகள், சாமரங்கள் இவைகளால் மண்டபம் அலங்கரித்து, தூப தீபங்களினால் நற்கந்தம் முண்டாக்க வேண்டியது

(4) (ஓம குண்டம்)

தீக்ஷா பட்டாபிஷேக, மண்டபத்திற்கு வடக்கில் பரிசுத்தமான யிடத்தில், ஓமகுண்டத்தின் உள்ளளவு, பக்கமொன்றிற்கு (24) அல்லது (18) அங்குலமாக நாற்புறமும் சுற்றளவு (96) அல்லது (72) அங்குலமிருக்கும் படியாகவும் (4) அங்குல ஆழமுள்ளதாகவும், பரிசுத்தமான மண்ணினால் ஈசான்ய திக்கிலிருந்தாரம்பித்து மேற்சொன்ன மாதிரி பரப்பி மத்தியில் மேடாயிருக்கும்படியாகவும்,மேற்சொன்ன அளவு படி பரப்பின பின்பு ஓம மண்டபத்து சுற்றிலுமுள்ள ஸ்தலத்தைவிட ஓமவேதிகை நான்கங்குல உயர மிருக்கவேண்டுமென்று முன்னமே சொல்லியிருக்கிறது ஓமவேதிகையினுள் ஜீவஜெந்துக்கள் போகாதபடி வேதிகையின் சுற்றிலும் நான்கங்குல வுயர முள்ள சுவர் மண்ணினாலாவது, செங்கல்லினாலாவது கட்டி மெழுகி, ஊதாநிறமுள்ள கோலங்களிட்டு பந்தல் போட்டு, வாழைமரம் வாழைப்பழம்கட்டி, மாவிலையும் பஞ்சதளிர்களும் தோரணம் கட்டி அலங்கரித்துப் பின்பு,

(1) அங்குரா ரோபணம் (1)

ஒருமூங்கில் புட்டி எடுத்து அதின்பேரில் நூலைச்சுற்றி எடுத்துக்கொண்டு போய் அதில் புற்றுமண் பரிசுத்தமான பள்ளத்தில் அல்லது ஏரியில் உலர்ந்த சேற்றுமண், உலர்ந்த சாணிப் பொடி இவைகளைப்போட்டு, அதின்பேரில் அருகு, அல்லது, வில்வம், முதலான தளிர்களைப்போட்டு, அதின்பேரில் நானாவிதமான புஷ்பங்களை வைத்து, தீக்ஷா, அல்லது விவாஹ, அல்லது பட்டாபிஷேக மண்டபத்தின் மேல் மத்தியாதியாக வைத்து, ஆசார்யன் தேசகாலாதிகளைச் சொல்லி

சங்கல்பம் (2)

ஏலம் குணவிசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதௌ

தீக்ஷா / விவாஹ கர்ம சாபல்ய நிரம்தர சுபச்ச சித்தித்வாரா

ஸ்ரீ பரமேஸ்வரப்ரீத்யர்த்தம் அம்குரா ரூபணம் கரிஷ்யே என்று சங்கல்பம் சொல்லிப்பிறகு ஐந்திடங்களில் பூஜிக்க

## பூஜிக்கு மந்திரம்

ஈசான்யாய நம: என்று மத்தியத்திலும், தத்புருஷாய நம: என்று வடக்கிலும், அகோராயநம: என்று மேற்கிலும, வாமதேவாயநம: என்று தெற்கிலும் சத்யோஜாதாய நம: என்று கிழக்கிலும், இந்தநாம மந்திரங்களால் விபூதி கந்தாக்ஷதைகளால் பூஜித்து, இந்த புட்டிக்கு மேற்கில் உட்கார்ந்து,

## நமஸ்கார மந்திரம் (4)

திசாம்பதி நமஸ்யாமி சர்வகாம பலப்ரதான்
குர்வம்து சததம் கர்ம குர்வம்து சததம் சுபம்
என்று இம்மந்திர உச்சாரணத்தால் நமஸ்கரித்து

## பஞ்சதான்யம் விதைக்க (5)

நெல்லு, பச்சைப்பயிர், கடலை, கோதுமை, எள்ளு, ஆக இந்த பஞ்ச தான்யங்களும் ஜலத்தில் கழுவி முன்பூசித்த ஈசான்யாதியான (5) ஸ்தானங்களில் இந்த புட்டியிலுள்ள மண்போட்டு தானியத்தை விதைத்து மேலும் இப்புட்டி மண் போட்டுப் பிறகு

## ஜலம் தெளிக்கு மந்திரம்

ஆகோ இஷ்டமயோ புவஸ்தான ஊர்ஜ்ஜித தாதன மஹேரணாய சக்ஷுசெ. ஹோவஸ்சிவ தபோரசஸ்தஸ்ய பாஜயதே ஹநு: உசதீரிவ மாதர: தஸ்மா அரங்க மாமவோ யஸ்ய க்ஷயாய ஜின்வத அகோசன யதாசன

என்று ஜலம் தெளித்து முன்போலவே பூஜித்து முடிப்பது அங்குரா ரூபணம், சமாப்தம்

## மண்டப தேவதா பிரதிஷ்டை

விவாஹத்திற்கு முதல்நாள்ராத்திரிவரன் தந்தையும்வது தந்தையும் பத்நிணி சஹிதராக அப்யங்கஸ்நானம் செய்து மடிவஸ்திர முடித்தி சுசியாகி மங்களவாத்தியங்களாய்க் கொண்டிருக்க அங்குராரூபண புட்டிவைத்த சுவாமி (தேவதா) கிருஹத்தில் சுபாசனத்திலமர்ந்து தன் பத்நிணியை வலப்பக்கம் உட்காரவைத்துக்கொண்டு இவர்களாவதும் அல்லது ஆசார்யராவதும்,

## (1) மண்டப சங்கல்பம்

தத்ர மண்டப வேதி காயாம் ஷட்சம் மார்ஜ்ஜனே லிப்ய ரங்க வாலிபி பஞ்சவர்ண விகாரம் பிரபுர்யாத் தஸ்மந்த்ரோ: கோதுமெ ஜீரகாதின் ப்ரதிஷ்டாப்யபஞ்ச பல்லிவ சம்யுதான் பஞ்சவர்ண வஸ்த்ரா பஞ்சரத்னமிளிதான் பஞ்சாக்ஷரமிளித் பஞ்சாசார்ய நாமாம் கிதான் சுவர்ணதிக்ரத பஞ்சகலசான் தத்தன் மத்ரை: ப்ரதிஷ்டாப்ய ததனம்தரம் சங்கல்பயாத்

(2) மண்டபத்திற்கு அக்ஷதை போட மந்திரம்

ஓம் மண்டபாய நம : ஹ்ரீம் பச ஹஸ்தாய நம :
ஹ்ரௌம் காரஸ்வரூபய நம : ஓங்கார சிரசே நம :
வகார ஹஸ் தாய நம : யகாராபய வரப்ரதாயநம :
நகார தேஹாய நம : மகார பீடமாய நம : மஹாதர்மாய நம:
சிவாய சச்சிதாநந்த விக்ரஹாய நம:

என்று மந்திர பூர்வகமாக மண்டபத்தின் மேல் அக்ஷதை யிறைத்த பிறகு

(3) மண்டப தேவதா திக் பாலக பிரதிஷ்டை

சங்கல்பம்

ஏவம் குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதௌ ஸ்வ: கரிஷ்யமாண $\frac{\text{தீக்ஷா}}{\text{விவாஹ}}$ கர்மாங்கபூத மண்டப தேவதா ஸ்தாபனம் கரிஷ்யே

என்று சங்கல்பம் செய்துப்பிறகு மண்டபத்திற்கு கிழக்கில்

(1) கிழக்கில் நந்தி ஆவாஹனம்

தீக்ஷ்ணஸ்ருங்காய வித்மஹே வேத பாதாய தீமஹி
தன்னோ வ்ருஷபஹ ப்ரசோத யாத்
இதி மண்டபஸ்ய பூர்வதசி நந்தி நாமாங்வாஹயேத்

(2) தெற்க்கில் விநாயக ஆவாஹனம்

ஏகதம் தாய வித்மஹெ வக்ர துண்டாய தீமஹி
தன்னோ விக்நேஸ்வர: ப்ரசோதயாத்
இதிதக்ஷி ணதசி விக்நேஸ் வர மாவாஹயேத்

(2) மேற்கில் ஷண்முகன், ஆவாஹனம்

தத்புருஷாய வித்மஹே மஹாசேனாய தீமஹி
தன்னோ ஷண்முக : ப்ரசோதயாத்
இதி பச்சிமதசி ஷண்முக மாவாஹ யேத்

(4) வடக்கில் வீரபத்ரன், ஆவாஹனம்

தத்புருஷாய வித்மஹே மஹா ரௌத்ராய தீமஹி
தஸ்னோ வீர : ப்ரசோத யாத்
இதி யுத்தாதசி வீரபத்திர மாவாஹ யேத்

(5) மண்டப மத்யம், உமாமஹேஸ்வரி, ஆவாஹனம்

கஹம்பிகாயை வித்மஹெ மஹாதபாயை தீமஹி
தன்னோ கௌரீ ப்ரசோதயாத் ஓம் ஹாம்
வ்யோம வ்யோமாய வித்மஹே சூக்ம சூக்ஷ்மாய தீமஹி

தஸ்ஞே சிவா: ப்ரசோதயாத் இதி மண்டபமத்யே
உமாமஹேஸ்வர மாவாஹ்ய சோடசோப சாரைஸ்ஸ. பூஜயேத்

என்று, ஐந்து தேவதைகளேயும் இன்னும்,

### திக் பாலகர்கள் ஸ்தாபனம்.

திக்பாலர்களை ஸ்தாபனம் செய்ய வேண்டுமானல் விபரம்.

### (1) கிழக்கில் இந்திரன், ஆவாஹனம்.

த்ராதார மிம்த்ர மவிதார மிம்திரகாம் ஹவேஹவே சுவகாம் சூரமிம்திரம் ஹவேசு சக்கரம் புருஹித மிந்த்ரகாம் ஸ்வஸ்தி நோம பூவாதாத் விம்த்ர: இதிமம்த்ரேண. இந்த்ரமவாாஹயாமி.

என்று, இந்திர ஆவாஹனம் செய்துப் பிறகு,

### இம்ந்திர பூஜிதரான தசருத்ர பூஜை.

கபிலேசாயநம: அஜாயநம: பத்தாயநம: வஜ்ரதேஹாயநம: ப்ரமர்த்தனுயநம: விபூதயேநம: அவ்யாயநம: சாஸ்த்ரேநம: பிநுகினேநம: த்ரிதசாதி பாயநம: இம்ந்த்ர வீர்யா: இம்ந்த்ர பூஜிதா: ஹே தசருத்ராஹா. சாவாஹனுஸ்ஸ சக்தயஸ்ஸ பரிவாராஸ்ஸ. மாகத்யாத்ர மண்டபே மத்யக்ருதான சேஷோ பசாராம்த்சி வீக்ருத்ய ப்ரசீதம்து பவத:

என்று பஞ்சோப சாரத்தால் பூஜித்துப் பிறகு,

### (2) தென் கிழக்கில் அக்கினி ஆவாஹனம்.

த்வன்ஞே அக்னே வருணஸ்ய வித்வான் தேவஸ்ய ஹேடோவயாஷி சிஷ்டா: யஜிஸ்டோ வஹ்னி தமஸ் சோஷு சாஞே விஸ்வாத்வேஷாகாம்சிப்ரமு முக்த்தியஸ்மத் இதிமம்த்ரேண அக்கினி மாவாஹயாமி

என்று அக்கினியை ஆவாஹனம் செய்துப் பிறகு

### அக்கினி பூஜித, தசருத்ர பூஜை

அக்கினி வீர்யாய நம: ஹுதாசினே நம: பிங்களாயநம: காத காயநம: ஹராய நம: ஜ்வலாயநம: தஹனுயநம: பப்ரவேநம: பஸ்மாம்தகாய நம: க்ஷயாம்தகாயநம: அக்கினிவீர்யா: அனி நிபூஜிதா: ஹே தசருத்ராஹா ஸ்வா: சம் ப்ரசீதம்து பவத:

என்று தசருத்திரரை ஆவாஹித்துப் பூஜிப்பது. பிறகு

### (3) தெற்கில் யமன் ஆவாஹனம்

சுகன்ன: பம்தா மபயம் க்ருஞேதுயஸ்மின்ன க்ஷத்ரேய மயேதிரு ஜாயஸ்மின்னேன மப்ய ஷிம்ச தேவா: ததஸ்ய சித்ரகாம் ஹவிஷாய ஜாம இதி மம்த்ரேண யம மாவாஹயாமி

என்று யமனை ஆவாஹனம் செய்துப் பிறகு

யம பூஜித தசருத்ர பூஜை

தத்ர விதாத்ரேநம:கர்த்தே நம: தாத்ரே நம: யாம்யேசாய நம: ஸ்ரீகாமாயநம:சர்வநியோத்ரேநம: யாம்யேசாயநம: ரமேசாயநம: சம்யோத்ரே நம: ஹராய நம: யமவீர்யாஹ, யமபூஜிதா: ஹே தசருத்ராஹ, சவா *..................ப்ரசீதம்து பவத:

என்று தசருத்திரரை ஆவாஹித்துப் பூஜிப்பது

(4) தென்மேற்கில் நிருதி ஆவாஹனம்

அசுன்வம்தம யஜமான மிச்டஸ் தேநஸ்தேத்யாம் தஸ்கரஸ்வான் வேஷி அஸ்ய மஸ்ம திச்ட சாத இத்யா நமோ தேவி நிக்ருதே துப்ய மஸ்து இதிமம்த்ரேண நிக்ருதி மாவாஹயாமி

என்று நைருத்யனை ஆவாஹித்துப் பிறகு

நைருதி பூஜித தசருத்ர பூஜை

நைருதேசாய நம: வருணய நம: ஹம்த்ரே நம: க்ரோத திருஷ்டாயே நம: பயானகாய நம: ஊர்த்வகேசாய நம: விரூபாக்ஷாய நம: தூம்ராய நம: லோஹிதாய நம: தம்ஷ்ட்ரகாய நம: நைருதிவீர்யா: நைருதி பூஜிதா: ஹேதசருத்ரா: சம் *.......................................ப்ரசீதம்துபவத:

என்று தசருத்திரரை ஆவாஹித்துப் பூஜிப்பது.

(5) மேற்கில் வருண ஆவா ஹனம்

தத்வாயாமி பிரஹ்மண வம்தமானஸ்தத தாசாஸ்தே யஜமானோ ஹவிர்ப்பி: ஆஹேடமானோ வருணே: போத்யுரு சகாம் சமான ஆயு: ப்ரவோஷி: இதி மமத்ரேண வருண மாவாஹயாமி.

என்று வருணனை ஆவாஹனம் செய்த பிறகு.

வருண பூஜித தசருத்ர பூஜை

பலாய நம: அதி பலாய நம: பாச ஹஸ்தாய நம: மஹாபலாய நம: ஸ்வேதாய நம: ஜயபத்ராய நம: தீர்க்க பாஹவே நம: பலாம்த காய நம: படபா முகாய நம: பைரவாய நம: வருண வீர்யா: வருணபூஜிதா: ஹே தச ருத்ரா: சம் *.......................................ப்ரசீதம்துபவத:

என்று தசருத்திரரை ஆவாஹனம் செய்து பூஜப்பது பிறகு

(6) வடமேற்கில் வாய்வு ஆவாஹனம்.

அநோனியுத் பிஸ்மதிப் ரத்வரம் சஹஸ்ரிணீப் ருவயாஹி யக்ஞம் வாயோ அஷ்மின் ஹவிஷமாத யிஸ்வயூயம் பாதுஸ் வஸ்திபி: சதான: இதிமம்ரேண வாயுமாவாஹயாமி.

என்று வாயுவை ஆவாஹனம் செய்துப் பிறகு.

(தொடரும்.)

வாய்வு பூஜித தசருத்ர பூஜை.

ஸ்ரீக்ராய நம: லகவே நம: வாயுவேகாய நம: ஸூட்மாய நம: தீக்ஷ்ணாய நம: பயங்கராய நம: பஞ்சாத்ம காய நம:

பஞ்சசிகாய நம: கபர்கதினே நம: மேஹவாஹனாய நம: வாயுவீர்யோ நம: வாயுபூஜிதா: ஹேதசருத்ரா:

சம் X... ...... ..... ..... ........ப்ரசீதம்துபவத:

என்று தசருத்திர ராவாஹனம்செய்து பூஜிப்பது, பிறகு.

(7) வடக்கில் குபேரன் ஆவாஹனம்

மயகாம் சோமவ்ரதே தவ மனஸ் தனூஷு பிப்ரத: ப்ரஜா வம்த. சசோமஹி இம்த்ராணிகேவி சுபகாசு பத்னி

இதி மந்த்ரேண குபேர மாவாஹயாமி

என்று குபேரனை ஆவாஹனம் செய்துப் பிறகு.

குபேர பூஜித தசருத்திர பூஜை

நிதீசாய நம: ரூபவதே நம: தன்யாய நம: செளம்யாய நம:

சாம்தாய நம: ஜடாதராய நம: காமப்ர சாதாய நம: லக்ஷ்மீசாய நம: ப்ரகாச ய நம: இம்து யக்ஞபாய நம:

குபேரவீர்யா: குபேரபூஜிதா: ஹே தசருத்ரா:

சம், X... .... ......... . ... .....ப்ரசீதம்து பவத:

(8) வடகிழக்கில் ஈசான்யன் ஆவாஹனம்

தமோசானம் ஜகதஸ்த் தஸ்து சஸ்பதிம் தியம் ஜின்வ வ சேஹ மஹேவய பூஷாணே யதாவேத சாமசத் விருதே ரக்ஷிதா பாயுர தத்பஸ் வஸ்தயெ இதி மந்த்ரேண ஈசான மாவாஹயாமி

என்று ஈசானனை அவாஹனம் செய்துப் பிறகு.

ஈசான பூஜித தசருத்ர பூஜை

ஈசானாய நம: வித்யேசாய நம: க்ஞானவதே நம:

மாத்ரு பிங்களாய நம: பூதபலாயநம: அஜாய நம: பலயே நம:

மித்ராய நம: சர்வவித்யாதிபாய நம: சுகக்ருதே நம:

ஈசானவீர்யா: ஈசானபூஜிதா: ஹே தசருத்ராஹா

சவா X... .. ... ........ .. .. ப்ரசீதம்து பவத:

என்று ஆவாஹனம் செய்து பூஜிப்பது.

(9) மேற்கு வடமேற்குக்கு மத்தியில் விஷ்ணு ஆவாஹனம்.

ஸ்யோனா ப்ருதிவீபவா நிருக்ஷரா நிவேசினி யச்டான: சர்ம சப்ராதா: இதிமம்த்ரேண விஷ்ணு மாவாஹயாமி

என்று விஷ்ணு ஆவாஹனம் செய்துப் பிறகு

விஷ்ணு பூஜித தசருத்ர பூஜா

பலிப்ரியாய நம:, விஷதராய நம: விரோக்ரசனாய நம

பாலகாய நம: சுபாய நம: சுவீர்யாய நம: வ்ருஷபாய நம:

பாதாளேசாய நம: லோஹிதாய நம: அனம்தாய நம:

விஷ்ணு வீர்யா : விஷ்ணு பூஜிதா : ஹே தசருத்ராஹா
சவா X......... . ... ... ப்ரசீதம்து பவத:
என்று ஆவாஹனம் செய்துப் பூஜிப்பது பிறகு.

(10) கிழக்கு வடகிழக்குக்கு மத்தியில் பிரம்மன் ஆவாஹனம்
அஸ்மேருத்ரா மெஹஹுபர்வதா சோவிருத்ர ஹத்யெ
பரஹூதௌ, நஜோஷா : யஸ்யம், சதேஸ்துவதே தாயி
வஜ்ர மிம்த்ர, ஜ்யேஷ்டா அஸ்மான் அவம்து தேவா :
இதிமந்த்ரேண பிரஹ்ம மாவாஹயாமி

என்று பிரம்மாவை ஆவாஹனம் செய்துப் பிறகு.

பிரம்ம பூஜித தசருத்ர பூஜா

அத்யக்ஷாய நம : சபசே நம : லிப்சவே நம : சம்பவே நம :
விபவே நம : கணுத்யக்ஷாய நம : விவாஹாய நம :
குணசம்வாஹாய நம : த்ரயக்ஷயாய நம : த்ரிதசவம்திதாய நம:
ப்ரஹ்ம வீர்யா : ப்ரம்ஹ பூஜிதா : ஹே தசருத்ராஹா
சம் X...... ... ..... ... ... ..... ப்ரசீதம்து பவத:
என்று ஆவாஹனம் செய்து பூஜிப்பது பிறகு
க்ஷேத்ரை யைத்வா நிருத்யைத் வாத்ய ஹோமும் சாமி
வருணஸ்ய பாசாத் அநாக சம்ப்ராஹ்மணேத்வா கரோமி
சிவே தேத்யாவா ப்ரதவீ உபே இமெ
இம்மந்திர உச்சரிப்பினுல் தர்ப்பைகளினுல் செய்த (25) முழமுள்ள தர்ப்பைக்கயிற்றினுல்மண்டபத்தைச் சுற்றிக்கட்டுவது

இதி மண்டப தேவதா பூஜை சம்பூர்ணம்

(1) கௌதுக பந்தன சங்கல்பம்

தீக்ஷா / விவாஹ கர்மணெபூர்வதினெராத்ரௌசாம்குரெபாலிகாயுக்திஸ்தலெ
மங்கலதூர்ய நாதெக்தெ கௌதுக பநதனம் குர்யாத்
தத்ரயம் க்ரகஹ ஆசார்ய : தித்யாகம் சம்கீர்த்யா
தீக்ஷா / விவாஹ கர்ம்ம கர்த்ரு மாதௌ ஸ்ரீ பரமேஸ்வரப் பிரீத் யர்த்தம்
கௌதுக பந்தனம் கரிஷ்யாமி
என்று சங்கல்பம் சொல்லி கோலங்களிட்டலங்கரித்த பூமியில் 5--7--9 இதிலேதாவ தொரு லக்கதிரப்பைகளை எடுத்து நுணியில்

---

குறிப்பு:—X இந்தப் புள்ளியுள்ள யிடங்களில் இதின் கீழுள்ள (2) வரியைச் சேர்த்துச் சொல்லவும்.

சவாஹனஸ்ஸ சக்தயஸ்ஸ பரிவாரா சமாகத்யாத்ர
மம்டபே மத்கிருதான, சேஷோபசாராம் ஸ்வீக்ருத்ய ;
என்று இதைச் சேர்த்துச் சொல்லிப் பிறகு,
பிரசீதம்து பவத : என்று சேர்த்துச் சொல்லவும்

(4) அங்குலமும் முடிச்சியில் (2) அங்குலமும் அடியில் (16) அங்குலமும் விட்டு பவித்திரமாகக் கட்டி கிழக்கில் நுனிகளிருக்கும்படி தர்ப்பை கூர்ஜ்ஜரத்தை வைத்து அதின் பேரில் ஜலகும்பத்தை வைத்து அரிசி நிறைத்த தட்டத்தில் தாம்பூலம் விபூதி தேங்காய் முதலானது வைத்து அதில் புது பருத்தியினுல் மாங்கல்ய ஸ்திரிகள் நூற்ற (5) எழை சேர்த்த கயிற்றை மஞ்சள் தடவி மூன்றாய் மடித்துத் திரித்து அதில் வெற்றிலையாவது அல்லது மாவிலையாவது திரப்பையுடன் சேர்த்துக் கட்டித்தயார் செய்த கங்கணத்தை வைத்து அதின் பக்கத்தில் யஜமானனை உட்காரவைத்துக்கொண்டு கங்கணத்திற்கு அக்கும்ப ஜலம் அபிஷேகிக்க.

(2) கங்கணத்திற்கு அபிஷேக மந்திரம்

தத்ச விதுர்வரேண்யம் அக்னி மொளெ இஷெத்வோர்
ஜித்வா அக்னி ஆயாஹி சன்னோதே வீர ப்ரஷ்டய
ஆபோ ஹிஷ்டேக் வாதி மம்க்ரை:

என்னும் மந்திரபூர்வகமாக அக்கலச ஜலத்தைக்கங்கணங்களுக்கு அபிஷேகித்து,

(3) கங்கணத்திற்கு சந்தனம் பூச மந்திரம்

ஜாதவேத செசுனவாம சோம மராதீயதோ நிதஹாதி வேத: சன: பர்ஷததி தார்க்காணிவிஸ்வானு வெவசிம்தும் துரிதாத் யக்னி:

என்று கங்கணத்திற்குச் சந்தனம்பூசி அக்கங்கணத்தை சோட சோபசாரங்களால் பூஜிப்பது பிறகு

(4) வரனுக்குக் கௌதுக பந்தனம்

விஸ்வாத்தாதே சவனேஷு ப்ரவாச்யாயா சகர்த்த
மகவன்னிம்த்ர சுனஸ்ததெ பாராவதம் யத்புருஷம்
பிருதம் வஸ்வபா வ்ருஞ்ஜோஸ் சரபாய ருஷிபந்தவே

என்று வரன் வலக்கையின் மணிக்கட்டின்மேல் ஷடி கங்கணம்கட்டி பூஜிப்பது, பிறகு

வதுவுக்கு கௌதுக பந்தனம்.

ஸ்ரீயே ஜாதஸ்ரிய ஆனிரியாய ஸ்ரியம் வயோ ஜரித்ருப்யோ ததாதிஸ்ரியம் வாசானு அம்ருதத்வ மாயன் பவம்தி சத்யா சமிதா மிதத்ரௌ, என்று வதுவின் இடைக்கையின் மணிக்கட்டில் கங்கணம் கட்டிப் பூஜிப்பது பிறகு

(5) மாஹேஸ்வரர் சொல்லும் மந்திரம்

சதம் ஜீவ சாதோ வர்த்தமானஸ் சதம் ஹேமம் தாங்டதமு
வசம் தான் சதமிந்த்ராக்னி சவிதா ப்ருஹஸ்பதி சதாயுஷா
விஷேமம் புனர்த்து: ஆஹார் ஸம்த்வா விதம்த்வா புனராகா:
புனர்நவ சர்வாங்க சர்வந்தெ சக்ஷுசுஸ்சர்வ மாயுச்யதே விதம்
ப்ருஹத் சாமக்ஷத்ரப்ருத்வ்ருத்த வ்ருணிஷ்யம் த்ரிஷ்டுபௌஜஸ்சு

பிதமுக்யவீரம் இந்த்ரஸ் தர்மேன பஞ்சதசேன மத்ய
மிதம்வாதேன சகரேண ரக்ஷா

என்று எல்லா மாஹேஸ்வரரும் ஜெபித்துப் பிறகு அனைவருக்கும் சந்தன புஷ்ப தாம்பூலம்கொடுப்பது,

மறுதினம் அல்லது விவாஹ நாள் வந்து, வரன் தந்தைகள் பிராதக்காலையிலொழுந்து நித்திய கர்மங்களை முடித்து பத்தினி சமேதராய் அப்பியங்கஸ்னனம் செய்து மடிவஸ்திர முடித்தி சுசியாகி வது தந்தை தர்ப்பாசனத்தி லமர்ந்து தன் வலப்பக்கத்தில் தனது பத்தினியை உட்காரவைத்துக் கொண்டு கண்டாநாதம் செய்துப் பிறகு

## பஞ்ச கலசஸ்தாபனம்

கோமயம் கோமூத்ரம், கோதயிர், கோவின் பால், கோவின் நெய், ஆக (5)ம் ஒன்றாகச் சேர்த்து மண்டபமத்தியில் மெழுகி அஷ்டதள பத்ம கோலம் பஞ்சவர்ண மாவுகளினால் இட்டு தன்னிரு கைகளையும் பூமியில் வைத்து ஜெபிக்க

### (1) பூமி சுத்தி மந்திரம்

ஓம் சிவசம்போ ராக்ய வக்ன, ப்ரவர்த்த மானஸ்ய
அபவித்ரோப சர்வாவஸ்து கதோபிவான்
யஸ்மரை புண்டரீ காட்க்ஷோ ஷபாம்ய ப்பாம்தர சுசிஹீ
ப்ரித்வீ த்வய ஹிரு தாலோக தேவுத்வம் விக்ந நாத்ருதம்
பஞ்சதாரயே மாம்தேவி பவிக்ரம் குரு சாசனம்
சம்மார்ஜ்ஜன சதம் புண்யம் சஹஸ்ரம் உநுலேபகம்
ரேகா சதம் சஹஸ்ரேஷு அனந்தம் பத்ம முச்யதே
பந்தம் பவஹரச் சைவ ஸ்வஸ்திகம் சேதார்நாசனம்,
பத்ம புண்யம் பலஞ்சைவ முத்ரிதம் மோக்ஷசாதனம்
ருஷிகூர்மோ தேவதா ஜகதிச் சந்த;

என்றுத் தன்னிரண்டு கைகளையும் பூமியின் மேல் வைத்து ஜபித்துப் பிறகு அதேயிடத்தில்,

### (2). வாழையிலை போட மந்திரம்

ஓஷதயஸ்சம் வதந்தேசோமேன சஹராக்ஞா யஸ்மை
க்ருணோதி ப்ராஹ்மணஸ் தகாம ராஜன் பாரயாமசி
என்று கிழியாத இரண்டு தலைவாழையிலைகளைப் பரப்பி பிறகு,

### (3) தானிய மந்திரம்

எனதோகாய தனயாய தான்யம் பீஜம், வஹத்வே அக்ஷிதம்
அஸ்மப்யம் தத்தஸ்தன யத்வ ஈமஹே
ராதோ விஸ்வாய சௌபகம்

என்னும் மந்திரப் பூர்வமாக நெல்லுபோட்டு இதிற் பாதி கோதுமை போட்டு இதிற் பாதி உளுந்து அல்லது பச்சைப்பயிர் இவைகளி

லொன்று போட்டு இதிற் பாதி எள்ளு போட்டு இதிற் பாதி அரிசி பரப்பிப் பிறகு.

### (4) கோணம் அக்ஷரஸ் தாபித விவரம்.

நடுமையத்தில் பிறை எழுதி அதனுள் மேல் வரியில் ஓம்,, நடு வரியில்,நம,என்றும் கீழ் வரியில், சிவ, என்றும்மூன்று வரிசையாக எழுதி, இப்படி கிழக்கில் நீள் வட்டம் எழுதி அதனுள், ஓம், நம சிவய, என்று ஒன்றன் கீழொன்றாய் (3) வரி எழுதி, தெற்கில் ஐங்கோண பெழுதி அதனுள், ஓம், சிவய நம, என்று (3) வரி எழுதி மேற்கில் நற்சதுர எழுதி அதனுள், ஓம், சிவய நம, என்று (3) வரி எழுதி, வடக்கில் முக்கோண மெழுதி அதனுள்ஓம் வய நமசி, என்றுஒன்றன் கீழொன்றாக (3) வரி எழுதி பிறகு

---

### கலச, லக்ஷணம்

உலோகங்களில் தங்க கலசம் வெள்ளி கலசம், தாப்பிர கலசம், உருக்கு கலசம், இரும்பு கலசம், இக்கலயங்களாவது, இதில்லா விட்டால் மண்கலயங்களானவை பவளம் போலச் சிவந்ததாயும் கல்லும் துவாரமுமில்லாததாயும் கருகாதவையாயும் நன்றாய் வெந்துள்ளதாயும் குறுகியும் நீண்டு மிராததாயும் ஒரேபிரமாண முள்ளதாக (5) கலய மெடுத்து ஆக்கலயத்தை அஸ்திர மந்திரத்தால் சுத்திசெய்து வெள்ளை, சிகப்பு, கருப்பு, அல்லது வெள்ளை,நீலம், பச்சை, இம்மூன்றுவர்ண மூவிழை நூல் அல்லது (9) இழை நூலினால் நெற்கிடை அல்லது எட்கிடை அல்லது ஆனைக்கண், அளவாக X. அகோர மந்திரத்தால் நூல் சுற்றி வைக்கவும். இன்னும் கலசங்களுக்குக் கீழ் எழுதி யிருக்கும் கமலமே மனம், தான்யமே பாதம், அரிசியே மண்டிகள், கூர்ஜ்ஜரமேலிங்கம் கலசமே தேஹம், நூலே நாடிகள், வஸ்திரமே தோல், கலயமாகிய மிருத்திகையே (மண்ணே) மாமிசம், ஜலமே உதிரம், மந்திரமே, பிராணன், ரத்தினங்களும், தங்கமும், மூளையும், அஸ்தியும், தேங்காய் சிரசு, பஞ்ச தளிர்கள், ஜடை, கேசம், நாக்கு, மாதுளம் விரைகள் தந்தமாயிருக்கும், இவைகளில் எந்த அங்கமும் குறையக் கூடாது,

### X, அகோர மந்திரம்.

ஸ்ரீம் அகோராய ஓம் த்ரிம் ஹரிம் ஜகத் பரிதாய நம:
ஓம் ஹ்ரீம் அகோர மஹேசாய நம: ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரும் க்ஷம் பயாச சர்வ கணயசர்வபூத ஹநஹந மர்த்ர யம்த்ர ரக்ஷ பாத யருத்ராய அகோர கர்ம மம்த்ரேணசதா படஸ்வா :

(5) பஞ்ச கலச ஸ்தாபன மந்திரம்

ஆகலஷேசு தாவதி சைஞேவர்ம விகாஹதெ அபித்ரோணு
கனிக்ரதத் இதி சௌர்ணுத்ய தமபிலசான் தத்யாத்
ஓம் சத்யோ ஜாதாயநம: சத்யோ ஜாத வக்த்ராய நம:
ஓம் வாமதேவாயநம: வாமதேவ வக்த்ராயநம:
ஓம் அகோராய நம: அகோர வக்த்ராய நம:
ஓம் தத்புருஷாய நம: தத்புருஷ வக்த்ராய நம:
ஓம் ஈசான்யாயநம: ஈசான்ய வக்த்ராய நம:
ஓம் சத்யோ ஜாத வாமதேவா அகோர தத்புருஷ
ஈசான்யாய நமோநம:

என்னும் மந்திரங்களினுல் நூல் சுற்றிய பஞ்ச கலசங்களை (32) அங்குல சதுரத்தில் நேருக்கு நேரும், மும்மூன்ருயிருக்கும் படியாக ஸ்தாபித்த பிறகு

(6) கலசங்களுக்கு ஜலமிடு மந்திரம்

இயம்மெ கங்கெயமுனெ சரஸ்வதி சுதுத்ரிஸ் தூமகாம்
சசதாபருஷ்ணியா அசிக்னியா மருத் விருதே விதஸ்த
யார்ஜ்ஜீ கியெ ஸ்ருணு ஹியாசு சோமயா
அமோவாதலி சர்வ விஸ்பதன்யாப: ப்ரபவா ஆப:
பசவ அபஹாசம் ம்ருடாபோ விலாபா ப:
ஸ்வராதாப: வம்தலிஸ்யாப: ஜோதிஆசாப:
யஜுகுசாப: சத்யமாப: சர்வதேவதாஆப:
பர்புவ: சுவராப ஓம் இதி மம்த்ராப்யாம்
தீர்த்தோதக வபிமம்த்ரியம்

என்று ஈசான்யகலசத்தில் சுமார் இரண்டுபடி ஜலம் விட்டுப் பிறகு சத்யோஜாத கலசம் வரையில் 4-கலசங்களுக்கும் அதிற் பாதி ஒரு படி ஜலம் விட்டு

(7) கலசங்களுக்கு சந்தனமிடும் மந்திரம்

கந்தத் வாராம் துரா தர்ஷாம் நித்ய புஷ்பாம் கரீஷிணீம்
ஈஸ்வரீகாம் சாவ பூதாஞம் தாமியோ பஹ்வ யேஹ்ரியம்.

என்று கலசங்களுள்ளும் மேலும் சந்தனமிட்டு புஷ்ப மாலைகளைப் போட்டு.

(8) பஞ்ச ரத்தின மந்திரம்.

சஹ்ரத் நானி தாசு சேசு வாதி சவிதாப க:
தம்பாகம் சித்ர மீம ஹெ

என்று முத்து, வைடூர்யம், கெம்பு, இந்திர நீலம், பவளம். என்னும் பஞ்சரத்தினங்களை பஞ்ச கலசத்தில் போட்டு இவைகளில்லா விட்டால் சொர்னபுஷ்பம் போட்டுப் பிறகு

(9) பஞ்ச மிருத்திகா மந்திரம்

ஸ்யோணு பருதிவி நோபவா நிருக்ஷரா ணிவேசினீ
யச்டான ஸ்சர்ம சப்ரத:

என்று பரிசுத்தமான புற்றுமண், ஏரிமண், அஸ்வசாலைமண், கஜசாலைமண், சவுட்டுமண், இந்த (5) மண்களையும் தனித்தனியே பிசைந்து உருண்டைசெய்து கலசங்களுக்கொரு மிருத்திகை (மண்ணுருண்டை)யாக வைத்துப் பின்பு

(10) சுவர்ண மந்திரம்.

ஹிரண்யரூப சஹிரண்ய சம்துருக பான்ன
பாங்தேது ஹிரண்ய வர்ண : ஹிரண்யாத்
பரிபோ னேர்நிஷத்யா ஹிரண்யம் தாதத்யம் நமஸ்மை

என்று சுவர்ணப் பிரதமைகளாவது அல்லது சுவர்ணத்துண்டுகளாவது கலசங்களில் போட்டுப் பிறகு

(11) பஞ்ச தளிர்கள் மந்திரம்

காண்டாத், கண்டாத், புரோஹபதி பருஷ : பரு : ஷபரி
ஏவாநோ தார் வேப்ரதனு சஹஸ்ரேண சதேனச
ப்ரவோ யக்ஞேசு தேவயம் தோ அர்ச்சம் தியாவானகாம்
ஹோபி : ப்ருதிவி இஷத்வியே ஏஷாம் ப்ரஹ்மண்ய
சமானி விப்ராவி ஷிவியந்தி வினிஞேனசாகா :

என்று அரசமரத்தளிர், மாமரத்தளிர், பெலாமரத்தளிர், ஆலமரத்தளிர், அத்திமரத்தளிர், இவைகளை வைத்து அறுகு தர்ப்பைகளை வைத்துப் பிறகு

(12) தேங்காய் மந்திரம்.

பூர்ணு தர்வீ பராபத சுபூர்ணு புசுராபதவஸ்னெவ
விக்ரீணுவ : இஷமூர்ஜ்ஜகாம் சதக்ரதோ, யாஹபலி
நீர்யா அபலா அபுஷ்பயாஸ்ச புஸ்பிணீ : ப்ருஹஸ்வதி
ப்ரசூதா ஸ்தாஞேமும் சத்வகாம் ஹச :

என்று தேங்காயாவதும், அல்லது இளநீர்ஆவதும் (5) கலசத்திற்கும் வைத்து. மாதுளம் பழவிதைகளை தளிர்களின் மீது வரிசையாக வைத்துப் பிறகு

(13) பஞ்ச வஸ்திர மந்திரம்.

யுவாசுவாசா : பரிவீத அகாத் சவுஸ்ரேயான்
பவதிஜாயமான : தம்தீராஸ் சகவய, உன்னயம்தி
ஸ்வாதியோ மனசாதே பயம்த :

என்று கிழக்கில் சத்யோஜாதம் பச்சைவஸ்திரமும், தெற்கில் வாமதேவம் சிகப்புவஸ்திரமும், மேற்கில் அகோரம் நீலவர்ணவஸ்திரமும், வடக்கில் தத்புருஷம் வெள்ளை வஸ்திரமும், மத்தியில் ஈசானம் மஞ்சள் வஸ்திரமும், இப்படியாக பஞ்சவர்ண வஸ்திரங்களைத்தரித்துப் பிறகு ஐந்து கலசங்களையும் சுற்றி ஒரு வெள்ளை வஸ்திரம் தரித்துப் பிறகு

(14) வெள்ளை நூல்சுற்றும் மந்திரம்.

தம் து தன்வன் ரஜசோ பானு மன்விஹி ஜோதிஷ்மத :
பதோரக்ஷ தியாக்ருதான் அனுல்பணம் பயசஜோ
குவமபோ மனுர்ப்பவ ஜனயா தைவ்யம் ஜனம்

என்று மாங்கல்ய ஸ்திரீகள் கையால் நூற்ற ஒன்பது இழை சேர்த்த வெள்ளை நூலை நடுக்கலசத்தில் சுற்றிப்பிறகு,கிழக்கு கலசத்திற்கும், நடுகலசத்திற்கும்,பிறகு தெற்கு கலசத்திற்கும், நடுக்கலசத்திற்கும், பிறகு மேற்கு கலசத்திற்கும் நடு கலசத்திற்கும் பிறகு வடக்கு கலசத்திற்கும் நடுக்கலசத்திற்குமாக மாறி மாறிச் சுற்றிப் பிறகு சுற்றிவர அதே வெள்ளை நூல் சுற்றிப் பிறகு

(15) தர்ப்பை கூர்ஜ்ஜரம்

பவித்ரம்தே விததம் ப்ரஹ்மணஸ்பதே ப்ரபர்க்காத்ராணி
பர்யேஷி விஸ்வத : அதப்த தனுர்னத தாமோஸ்னுதே
ஸ்ரிதாச இத்வஹம் தஸ்தத் சமாசத :

என்று (9) தர்ப்பை உத்தமம் (7) தர்ப்பை மத்திமம் (5) தர்ப்பை அதமம் இந்த லக்ஷத்திலொருலக்க தர்ப்பைகளை எடுத்து ஒன்று சேர்த்து நுணியில் நான்கு அங்குலம் விட்டு இரண்டங்குலம் முடிபோட்டு அடியில் (16) அங்குலம் விட்டு பவித்ரமாகக் கட்டி தர்ப்பை பவுத்திரத்தை நடுகலசத்தின்மேல் வைத்து ஒவ்வொரு தர்ப்பையை மற்றுமுள்ள கலசங்களின் மேல் வைத்து

(16) தாம்பூல புஷ்ப மந்திரம்

யாஹபலி நீர்யா அபலா அபுஸ்பாயாச்ச புஷ்பிணீ :
ப்ருஹஸ்பதி ப்ரசூதாஸ்தானோமும் சத்வகாம் ஹச :

என்று தாம்பூலம் புஷ்பம் பழம் தேங்காய் முதலான பூஜாதிரவியங்களும், பஞ்சபத்ரீ, அதாவது வில்வபத்ரீ, வெள்ளைத்துளசி, நொச்சிபத்ரி, நெல்லிபத்ரி, எலுமிச்சன் பத்திரிகளும், புஷ்பங்களும் வைத்தலங்கரித்து, பாசிங்கம் கால்மோதிரம்,, வேஷ்டி புடவைகளையும், வைத்துப் பிறகு, விவாஹநாள் வது வரன் இவர்களின் தந்தைகள் பிராதக் காலையிலெழுந்து நித்திய கர்மங்களை முடித்து பத்தினி சமேதராய் அப்யங்கன ஸ்நானம் செய்து மடி வஸ்திரமுடித்தி சுசியாகி வது தந்தையானவர் தர்ப்பாசனத்திலமர்ந்து தன் வலப்பக்கத்தில் பத்தினியை உட்காரவைத்துக் கொண்டு பூஜை செய்ய விபரம்

பஞ்ச கலச ஸ்தாபனம் முற்றிற்று

## பஞ்ச கலச பூஜாரம்பம்.

ததேவலக்கனம் சுதினம் துதேவா,தாராபலம்சந்தரபலம் துதேவா வித்யாபலம் தைவபலம்து தேவா,கௌரீபதீப்ரம்பியுகம் ஸ்மராமி

என்று சொல்லிப் பிறகு கண்டாநாத மந்திரத்தால் கண்டாநாதம் செய்துப் பிறகு ஆசமனம் பிராணயாமம் செய்த பிறகு.

# நூதன சஜ்ஜை.

புதுமாதிரியான சிறந்த, அதி சௌந்தர்யமான சஜ்ஜை (லிங்கக்காய்) இதைச் சிறுவர் முதல் முதியோர் வரையில் ஆண் பெண்களனைவரும் எவ்வித ஜாதி வித்தியாசமு மின்றி எல்லா லிங்கதாரிகளும் நிராபாரமாக அணிந்து கொள்ளத் தகுதியானது குனிந்து, நிமிர்ந்து வளைந்து ஓடி, வேலை செய்தாலும், மார்புக்கு அடிபடாமலும் அதிக கனமும், பளுவும், பருமனுமில்லாமலும், வெகு திறமையான வேலைப் பாடுடன் செய்யப்பட்டது. இதில் உபயோகமில்லாத விடங்களும் அழுக்கடையு மிடங்களும் பாசம் பிடிக்குமிடங்களும், கிஞ்சிற்று மிருப்பதில்லை. நூற் கயிறு சீக்கிரம் துண்டிக்காத (அறுந்து போகாத) மாதிரியாக அமைக்கப் பட்டிருக்கிறது. இதில் கீழ்மேல் பத்தவைப்புகளில்லாமலும் இருபக்கங்களிலும் அஷ்டதள (எட்டுப்பட்டை) கெட்டி குண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதால், இது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு நீடித்திருக்கும். அளவிலும் சிறிய உருவமாகையால். இதின் மீது சொக்காயணிந்தாலும் மார்புக்கு மேல் உயர்ந்து காணப்படுவதில்லை.

சுத்த வெள்ளி சஜ்ஜை 1-க்கு விலை ரூ. 5—4—0 முதல் ரூ. 6—8—0 வரையிலும் தங்கத்தில் தேவையானால் 10 சவரன்களும் இதற்கு கூலி ரூ. 10—0—0-ம் சேதாரம் அரைவராடையும் ஆகிறது. இவைகள் தேவையுள்ளவர்கள் முன் பணமனுப்ப வேண்டும். பதில் விரும்புவோர்கள் ரிப்ளை கார்ட் எழுதவும்.

# வைத்தியாம்சம்!

56-பக்கமுள்ள புஸ்தகம், இதில்தாய்மார்களின் விஷயங்களும், சிசுக் (குழந்தை) களுக்கு வரும் நோய்களும் நோய் வரும் காலங்களும், மற்றும் பலவித தோஷங்கள், மாந்தம், கணம் இவற்றினுட் பிரிவு 8-வகைகளின் விபரங்களும், கிரந்தி, இருவகையும், பாலகிரகதோஷங்கள் 16-பிரிவும், வைசூரியில் 14, விதமும், வாந்திபேதியில் 3-விதமும், பிளேக்வியாதியி லிருவிதமும், முடக்குமாரி, இன்புளுயன்சா சுரம் முதலான வியாதிகளின் குணங்குறிகளும் அவ்வவ்வகைக்குள்ள வாய்தா நாட்களும், பத்தியாபத்தியங்களும். அவரவர்கள் செய்துக்கொள்ளும் அவுஷதங்களும், குளிசங்களும், பூசைகளும் மந்திரங்களும், பரிகாரங்க (சிகிச்சை) களும் சில முக்கியமான மருந்துகளின் உபயோகங்களும் ஒருங்கு சேர்த்து அனைவரும் சுகமுறக்கருதி உலோகோபகாரமாகவெளிப் படுத்தியது. இப்புஸ்தகம், தேவையுள்ளவர்கள், இரண்டணா தபால் முத்திரையுடன் விலாசம் தெரிவிக்கவும்.

**வை. செ. குருசாமி ஐயர்,**

**வைத்தியம், குகை, சேலம்.**

மாத வெளியீடு

தனிப் பிரதி விலை அணா 2.



சிவமயம்.

பரமயோகி மனோம்புஜ ஷட்பதம் திரிவித
காரண காரண மவ்யம் சகுண நிற்குண தத்வ
மநாமயம் குருசதா சிவலிங்க மஹம் பஜே

# சிவ பக்தன்.

## யுவ-வருஷம் ஆடித்திங்கள்,

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | மானவரின் முக்கிய கடமை ... ... | 1 |
| 2 | தென்னிந்திய வீரசைவரின் பெரிய மடம் ... | 2 |
| 3 | நாமகரணா நுஷ்டான விதி ... ... ... | 3 |
| 4 | ஸ்ரீ ருத்திர பாரதம் ... ... ... | 9 |
| 5 | சிவஞ்ஞானம், ஏகாதச பிரசாதங்கள் ... ... | 11 |
| 6 | தசவித பாதோதகங்கள் ... ... ... | 13 |
| 7 | தானே சதாசிவம் ... ... ... | 15 |
| 8 | ரிஷிகள் வம்சம் ... ... ... .... | 18 |
| 9 | பஞ்சயுக, பஞ்சபடங்கள் ... ... ... | 21 |
| 10 | ஜங்கம லக்ஷணம் ... ... ... ... | 22 |
| 11 | பஞ்ச சைவம் ... .... ... ... | 23 |
| 12 | 21 ஆசனத்தவர்கள், ஜங்கம மஹிமை ... ... | 25 |
| 13 | ஜங்கம பிரசாதம் ... ... ... .... | 28 |
| 14 | உதய தரிசனம் ... ... ... ... | 29 |
| 15 | பிரளயகாலம், விஷ்ணு சிருஷ்டி ... ... | 31 |
| 16 | பரசிவ ஜங்கமலிங்கத்தின் சிருஷ்டி ... ... | 35 |
| 17 | ஜாதக்கர்ம லிங்கதாரண விதி ... ... | 37 |
| 18 | ஜங்கமரென்பது யார்? ... ... ... | 46 |
| 19 | சிவ சர்வோத்தமத்வம் ... ... ... | 49 |
| 20 | பஸ்ம (விபூதி) தாரணம் ... ... ... | 54 |
| 21 | விவாஹ விதிகள், .... ... | 57 |
| 22 | மண்டப் தேவதா பிரதிஷ்டை ... ... | 61 |
| 23 | பஞ்ச கலச ஸ்தாபனம் .... ... ... | 68 |
| 24 | பஞ்ச கலச பூஜாரம்பம் ... .... ... | 72 |